Registered as a Newspaper பக்கங்கள் 10 விலை ரூபா 6.00

நல்லூர் மாநகர யாழ்ப்பாண

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 15 (28.01.94) வெள்ளிக்கிழமை ஓசை 344

## மாணவர் இலவச சீருடை பெற விண்ணப்பிக்க வேண்டும்

பாடசாலை மாணவர்கள் தமது இலவச சீருடைகளைப் பெற்றுக்கொள்ள பாடசாலை அதிபர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. மாணவர்கள் சீருடைகோரி விண்ணப்பித்ததும் மாணவர்களுக்கு கூப்பன்கள் அல்லது அட்டைகள் வழங்கப்படுமெனவும் இவற்றை ஒப்படைப்பதன் மூலம் கூட்டுறவு மொத்த நிலையம், கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது அங்கீகாரம் பெற்ற வியாபாரிகளிடமிருந்து சீருடைத் துணிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (10ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரின் பிரச்சினை குறித்து புலிகள் - மேற்றாணியார் பேச்சு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் வந்துள்ள றோமன் கத்தோலிக்க அதிமேற்றாணியார் குழுவினர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர் நேற்று மாலை நடத்தப்பட்ட இப் பேச்சுவார்த்தையின்போது இன்றைய அரசியல் நிலைகுறித்தும், தமிழ்மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி குறித்தும் பேசப்பட்டதாகத் தெரியவருகின்றது.**

அதிமேற்றாணியார் மேதகு நிக்களஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ, திருமலை - மட்டக்களப்பு ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, துறவற சபைகளின் தலைவர் அருட்திரு அல்பிறெட் அலெக்ஸ்சாண்டர் மற்றும் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம், குரு முதல்வர் அருட்திரு எஸ். ஜே. இம்மானுவேல், மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட்திரு எஸ். ஜெபநேசன் ஆகியோர் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டனர்.

இரண்டு மணித்தியாலம் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின்போது விடுதலைப் புலிகள் சார்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன், இதன் துணைப் பொறுப்பாளர் வே. பாலகுமாரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இன்றைய அரசியல் நிலை பற்றியும், யாழ்ப்பாண மக்களின் நிலைமைகள் குறித்தும் இப் பேச்சுக்களின்போது ஆராயப்பட்டது.

## யாழ். பல்கலை. மாணவன் கொழும்பில் கைது

(கொழும்பு)

யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒருவர் கடந்த 17ஆம் திகதி நீர்கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். சண்டிலிப்பாயைச் சேர்ந்த செல்லையா சிறிதரன் என்பவரே சந்தேகத்தின் பேரில் நீர்கொழும்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டவராவார்.

அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த இவர் தெகிவளையில் தங்கி நின்றதாக தமக்கு கிடைத்த தகவலின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

## புளொட்குழு உறுப்பினர் கொழும்பில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

புளொட் குழுவின் முன்னாள் மூத்த உறுப்பினர் உமா பிரகாஸ் என்பவர் இனந்தெரியாத துப்பாக்கி நபர்கள் இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உமா பிரகாஸ் கொழும்பு புறநகரப் பகுதியில் உள்ள அவர் வீட்டுக்கு அருகே சுட்டுக் கொல்லப்பட்டதாக இராணுவத் தரப்பில் சொல்லப்படுகிறது.

புளொட்டிலிருந்து விலகி மாற்று அமைப்பொன்றை அமைத்திருக்கும் இவர் இராணுவத்தினருடன் சேர்ந்து (10ஆம் பக்கம் பார்க்க)

தற்கொலை முயற்சியில்

## 6 தடவை தோல்வியுற்றவர் ஏழாவது தடவை மரணம்

(யாழ்ப்பாணம்)

ஆறு முறை தற்கொலை முயற்சிசெய்த ஒருவர் ஏழாவது முறை மரணமான சம்பவமொன்று உடுவில் தெற்கு ஆலடியில் நேற்றுமுன்தினம் நடந்தது.

புங்குடுதீவைச்சேர்ந்த செல்லத்தம்பி இந்திரலிங்கம் (வயது 45) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

புங்குடுதீவில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது உடுவில் தெற்கு ஆலடியில் வசித்து வந்த இவர், புங்குடுதீவில் இருந்த காலத்திலும் தற்கொலை முயற்சியில்ஈடுபட்டதாகவும் அண்மையில் மூன்று கிழமைக்கு முன்பும்கூட சிறிய கயிற்றுத் துண்டைக் கழுத்தில் இறுக்கிக் கட்டி தற்கொலை செய்ய முயன்றபோதுதான் காவல்துறையில் புகார்செய்ததாகவும்அவர்களும் அவருக்கு அறிவுரை கூறியதாகவும்தெரிவித்த இவரது மனைவி மேலும் தெரிவிக்கையில்; நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் வீட்டுக்கு வந்தவர்பிள்ளைக்கு அடித்துவிட்டு வீட்டினுள் நுழைந்ததாகவும் அப்பா அறையினுள் நித்திரை கொள்கிறார் என பிள்ளை வெளியில் இருந்ததாகவும் பின்னர் வீட்டினுள் கூரையில் கயிற்றைக் கட்டி அதில் சுருக்கிட்டு இறந்து கிடப்பதைக் கண்டதாகவும் தெரிவித்தார். (சி)

## 'விடுதலைப் புலிகள்' ஏடு நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்' இதழின் தை மாத இதழ் நாளை வெளிவருகின்றது.

'பெருமெடுப்பிலான படையெடுப்புக்கு சிங்கள அரசு தயாராகின்றது' என்ற தகவலை தலைப்புச் செய்தியாகத் தாங்கி வருகின்ற இவ் இதழில் 'சிங்கள தேசத்தின் போர் வெறி' என்ற கருத்துரை வழங்கப்பட்டுள்ளது.

''படை பலத்தை வைத்துப் பேசப்பட்ட பேரத்திற்குக் கொடுக்கப்பட்ட அடி!'' என்ற தலைப்பில் - 'ஒப்பறேசன் தவளை' மீது ஒரு நோக்கு- என்ற கட்டுரையுடன், ''பூநகரி கூட்டுப் படைத்தளம்- அமைப்பு- பலம்- வரலாற்றுப் பின்னணி'' 'வீறுடன் போரிடும் வீராங்கனைகள்- பூநகரிச் சமர் தரும் சான்று', 'ஒப்பறேசன் தவளையில் கடற்புலிகள்', 'சமர்க் களங்களில் கமராக்கள்', ஆகிய தலைப்புகளிலான கட்டுரைகள் இவ் இதழில் இடம் பெற்றுள்ளன.

மேலும், வேவு வீரர்கள் (2 ஆம் பக்கம் பார்க்க)

## 'கோமாரி' நாளை வரலாம்

(வடமராட்சி)

கொழும்பு துறைமுகத்தில் இருந்து ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு புறப்படும் 'கோமாரி' கப்பல் நாளை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. (யோ)

## வினாத்தாள்கள் வந்தன

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் இம்மாதம் 29, 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கல்விக் கல்லூரி பரீட்சை வினாத்தாள்கள் நேற்று யாழ். கல்வித் திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்டன.

கொழும்பில் இருந்து பலாலிக்கு விமானம் மூலம் எடுத்துவரப்பட்டு பருத்தித்துறை துறைமுகத்திற்கு 'வாதுவ' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டது. பின்னர் கல்வித் திணைக்களத்தை வந்துசேர்ந்தது. (யோ)

## கட்டுத் துவக்கால் காயம்

(யாழ்ப்பாணம்)

கட்டுத்துவக்கு (இடியன்) வெடித்ததில் கனகராயன் குளத்தைச் சேர்ந்த மகேந்திரன் என்பவர் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில்சிகிச்சைபெற்று வருகிறார்.

மேற்படி நபர் பன்றி வேட் (10 ஆம் பக்கம் பார்க்க)

யு. என். எச். சி. ஆர். அதிகாரியிடம்

## விமான குண்டுவீச்சுகுறித்து பொதுமக்கள் புகார்

(யாழ்ப்பாணம்)

''சில மாதங்களுக்கு முன்னர் கிளாலிக் கடல் நீரேரியின் ஊடாகப் பயணம் செய்த மக்கள் பலர் கொலை செய்யப்பட்டனர். இன்று கிளாலியூடாக மக்கள் ஆபத்தின்றிப் பயணம் செய்கின்றனர்.''

இவ்வாறு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலய கொழும்பு அலுவலகத்தின் பாதுகாப்பு அதிகாரி கலாநிதி பீற்றர் நிக்கலஸ் தெரிவித்தார். (10ஆம் பக்கம் பார்க்க)

## இரவு எறிகணை வீச்சில் கணவன், மனைவி காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரக் கரையோரப் பகுதிகளை நோக்கி நேற்று இரவு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலினால் கணவனும் மனைவியும் காயமடைந்துள்ளனர்.

இரவு 10.30 மணியளவில் (10 ஆம் பக்கம் பார்க்க)

சமாதான முன் முயற்சியாக

## யுத்த கைதிகளைபுலிகள் விடுவிக்க வேண்டும்

ரணில்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளின் முதற்கட்ட நடவடிக்கையாக விடுதலைப்புலிகள் யுத்தக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கும் சிறிலங்கா இராணுவத்தினரை விடுதலை செய்யும்படி பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா விடுதலைப் புலிகள் அமைப்பைக் கோரியுள்ளார்.

பிரான்ஸ் செய்தி நிறுவனமான ஏ. எவ். பிக்கும், இந்திய செய்தி நிறுவனத்துக்கும் வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இரத்தம் சிந்துவதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் காலம் நெருங்கி விட்டது என்றும் அவர் கூறினார்.

## கடற்படைச் சிப்பாயின் நியமன பத்திரம் நிராகரிப்பு

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை தாக்கிய கடற்படைச் சிப்பாயின் தேர்தல் நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டது.

விஜித்த ரோஹண விஜயமுனி என்பவர் சிறிலங்கா-இந்தியா ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புக்காட்ட ராஜீவ் மீது தாக்குதல் நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரால் தென் மாகாண சபை தேர்தலில் போட்டியிட நியமனப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டபோதும் அது தவறானது என தேர்தல் அதிகாரியால் நிராகரிக்கப்பட்டது.

# வரி விளம்பரம்

## ஸ்ரீலங்கா அச்சகம்

மக்கள் அபிமானம் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம் ராஜா தியேட்டர் அருகாமை — ஸ்ரீ காந்தா அச்சக லேனிலேயே நடைபெறுகின்றது. எமக்கு வேறு கிளைகள் கிடையாது. (7307)

## தாமரைச்செல்வி எழுதிய நாவல்கள்

தாகம், விண்ணில் அல்ல விடிவெள்ளி படிக்கத் தவறாதீர்கள். தாமரைச்செல்வி கடந்த பதினைந்து ஆண்டுகளில் வாசகர்கள் நெஞ்சத்தில் தனியானதோர் இடம் பிடித்துவிட்டவர். கதையைச் சொல்வதில் தனிநடை, திறமை, புதுமை. (7275)

## பெயரை மத்தலுக்கான எண் ஜோதிட வெளியீடு

அதிர்ஷ்டமான திகதிகளில் பிறந்தவர்களை விட பெயர் மாத்திரம் அதிர்ஷ்டகரமாக உடையவர்கள் மேன்மையடைவதைக் காணலாம்- பெயரெண்ணை நன்றாக அமைத்து விட்டால் வாழ்க்கை சீர்பட்டு விடும். பலன்கள், விளக்கங்களுடன் எங்கும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. ஸ்ரீவாணி, உடுப்பிட்டி. (7324)

## ''சக்தி இயற்கைப் பசளை''

சக்தி இயற்கைப் பசளை. அசல் கூட்டெரு. தோட்டப் பயிர்களுக்கு ஊட்டமளித்து விளைச்சலைப் பெருக்குவதில் நிகரற்றது. 1/2 கிலோ பக்கற் ரூ. 7/-, 5 கிலோ விலை ரூ. 65/-, 20 கிலோ விலை ரூ. 240/- ''மில்க்வைற்'' (சி-8462)


## பரீட்சைகள்

கணக்காய்வாளர்களுக்கான பரீட்சை பெப்ரவரி 26ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளதாக செயலகத்திற்கு கொழும்பிலிருந்து யாழ். அரசாங்க அதிபர் அனுப்பிய செய்தியில் குறிப்பிட்டுள்ளதாக மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (சி)

## சுய தொழிலுக்கு 4000 ரூபா உதவி

கிளாலிப் பகுதியில் ''ஒப்பிறேசன் யாழ்தேவி'' நடவடிக்கையில் பாதிக்கப்பட்ட மிருசுவில்பங்கைச்சேர்ந்த 30 குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக்காக 4 ஆயிரம்ரூபா வழங்கப்பட்டுள்ளது (21)

## கண்டெடுப்பு

ஆர். திருப்பதிபிள்ளை, பி. ராஜேஸ்வரன் ஆகிய இருவரினது பென்சன் வவுச்சர்களும் மற்றும் நல்லூர் ப. நோ. கூ. சங்க, கூட்டுறவு கிராமிய வங்கி சேமிப்பு கணக்குப் புத்தகமும் அ. தேவதாஸ் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழ நாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

⁂

சங்கானை செ. சிவஞானம் என்பவரின் தேசிய அடையாள அட்டையும் வேறும் சில ஆவணங்களும் ஓட்டோ ஒன்றில் தவறுதலாக விடப்பட்டு வட பிராந்திய முச்சக்கர வண்டிச் சேவைச் சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் உரியவர் ஆதாரம் காட்டிப் பெறுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தைபோயிட் காய்ச்சலுக்கு 11 நோயாளர்கள் பலி

### 1486 பேர் சிகிச்சை பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

கடந்த 1993 ஆம் ஆண்டு யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 1486 பேர் தைபோயிட் காய்ச்சல் நோய்க்கு இலக்காகினர். 11 பேர் இந் நோயினால் மரணமடைந்தனர் என புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

மேற்படி நோய்க்கிலக்கானவர்களது விபரம் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு ரீதியாக வருமாறு: சாவகச்சேரியில் 226 பேர் நோய்க்கிலக்காகினர் 5 பேர் மரணமடைந்தனர். மானிப்பாயில் 171 பேர் நோய்க்கிலக்காகினர். ஒருவர் மரணமடைந்தார். பருத்தித்துறையில் 587 பேர் நோய்க்கிலக்காகினர் ஒருவரும் மரணமடையவில்லையென தெரிவிக்கப்பட்டது. கோப்பாயில் 191 பேர் நோய்க்கிலக்காகினர், 4 பேர் மரணமடைந்தனர். தெல்லிப்பளை, உடுவிலில் 118 பேர் நோய்க்கிலக்காகினர் ஒருவரும் இறக்கவில்லை. யாழ்ப்பாண மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 193 பேர் நோய்க்கிலக்காகினர். ஒருவர் மரணமடைந்தார். (சி)

## விடுதலைப்

நினைவாக 'வெற்றிக்கு வித்திட்ட வேங்கைகள்' என்ற கட்டுரையும், கடற் கரும்புலிகள் மேஜர் கணேஸ், மேஜர் கோபி ஆகியோர்கள் பற்றிய 'சாவுக்கு விலங்கிட்ட நெருப்பு மனிதர்கள்' என்ற கட்டுரையும, 'தவளை' என்ற உருவகமும், 'பூமிப் பந்தின் நெற்றியில் பூநகரி சுவரொட்டியானது' என்ற கவியுரையும் மேலும் சில அம்சங்களையும் தாங்கியதாக 18 பக்கங்களில் இவ் இதழ் வெளிவருகின்றது

# சலரோகம்

உட்கொள்ளும் போது நஞ்சாகவும் செயற்படுகின்றனவோ, அது போலவே சீனியின் உபயோகமும் அமைகின்றது.

உடல், உள நெருக்கீடுகள் ஏற்படும் போது கோட்டிசோல், அதிரினலீன் என்பன அதிகம் சுரக்கப்படுவதாலும் குருதியில் குளுக்கோசு அளவு அதிகரித்து, இன்சுலின் சுரப்பதும் அதிகரிக்கும். இதுவும் எப்போதாவது ஒருமுறை ஏற்படின் உடலைப் பாதிப்பதில்லை. ஆனால் தொடர்ச்சியான நெருக்கடிகட்கு ஆளாகும் ஒருவர் தொடர்ச்சியாக ஓமோன்களைச் சுரப்பதால் சதையின் தொழிற்பாடு பாதிப்படைவதால் இன்சுலின் சுரப்பு குறைவடைந்து சலரோகம் ஏற்படலாம்.

எனவே சலரோகம் ஏற்படக்கூடிய இயல்புகளைப்பரம்பரை மூலம் பெற்ற ஒருவர் தவறான உணவு, வாழ்க்கை முறைகளைக் கொண்டிருந்தால் சலரோகம் எளிதில் ஏற்படுகின்றது. அவ்வாறான இயல்பு இல்லாதவரும் இத்தகைய வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பவராயின் நாளடைவில் சலரோகம் ஏற்படக்கூடிய நிலை அவருக்கும் வரலாம். மேலும் சலரோகம் உள்ளவர்களுக்கும் நெருக்கீடுகள், கர்ப்பநிலை, நோய்கள் ஏற்படும் போது அதன் தாக்கம் அதிகரிக்கலாம்.

மேலும் தினசரி 30 நிமிடங்களுக்காவது உடற்பயிற்சிகளில் அல்லது தசைப் பயிற்சிகளில் ஈடுபடுவது சலரோகம் மட்டுமன்றிப் பல நோய்கள் வருவதையும் தடுக்கவல்லது சலரோகம் உள்ளவர்கள் இப் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு அவர்களின் வைத்தியரின் ஆலோசனையுடன் மருந்துகளையும் உணவையும் சரி செய்ய வேண்டும்-

சலரோகம் ஏற்பட்ட பின் உணவு சீரர்க்கப்பட்டதுமே பலருக்குச் சலரோகம் கட்டுப்பாட்டினுள் வந்துவிடும். சிலருக்கு இன்சுலின் சுரப்பதை ஊக்குவிக்கும் மருந்துகள் தேவைப்படும் இவை எல்லாம் வைத்திய ஆலோசனையுடன் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படுவதால் எல்லோரும் மகிழ்வானதும் நிறைவானதுமான வாழ்வைப் பெறலாம்-

அவ்வாறு செய்யாமல், சலரோகம் இருப்பதை அறிய விரும்பாமல் அதன் உடல் மீதான தாக்கத்துக்கு உட்படுபவர்கள் பல்வேறு பாதிப்புக்குட்பட நேரிடும் சில உதாரணங்கள் தரப்படுகின்றன;

- நரம்புகள் பாதிக்கப்பட்டு கைகால்களில்உணர்ச்சி குன்றி, இலகுவில் காயங்கள் ஏற்படலாம்.

நோயெதிர்ப்புச் சக்தி குன்றுவதாலும், அவயவங்களிலுள்ள குருதிக்கலன்கள் அடைபடுவதாலும் இலகுவில் தொற்றுக்கள் ஏற்பட்டு வேகமாகப் பரவிப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

நெருக்கீட்டு நிலைமைகள் ஏற்படும் போது உடலில் அமிலத்தன்மை அதிகரித்து மயக்கநிலையும் இறுதியில் மரணமும் ஏற்படலாம்.

இருதய நோய்கள், கைகால் வழங்காத நிலை என்பன ஏற்பட்டு நடமாட முடியாத நிலை ஏற்படலாம்.

இன்னும் பல வகையான பின் விளைவுகள் ஏற்படலாம் எனவே, அனைவரும் சரியான உணவு முறைகளைக் கடைப் பிடிப்பதால் நோய்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முயலவேண்டும். நோய் ஏற்படும் தன்மையுள்ளவர்கள் ஆரம்பநிலையிலேயே அதை அறிந்து, வைத்தியருடன் கலந்து ஆலோசித்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். வருமுன் காப்பது விவேகமாகும்.


தரமானதாகத் தர முயற்சிப்பதால்,
சில சமயங்களில் தாமதமாகிப்
போய்விடுகின்றது

தைமாத

**நங்கூரம்**

படியுங்கள்

யாழ் நகரின் சகல புத்தகசாலைகளிலும்
கிடைக்கும்.

(சி-8471)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



மண்ணுலகம்:
17-11-1919

விண்ணுலகம்:
29-12 1993

திருமதி

### அந்தோனிப்பிள்ளை மேரி மியூறியஸ்

(குருவில்)

எம்மை வளர்த்தீர், பேணி வளர்த்திட்டீர்,
கற்பித்தீர், கலைகள் பல தெரிய வைத்தீர்
இறுதியில் எமைப்பிரிந்து துயரத்தில் ஆழ்த்தினீர்.

இவரின் ஆத்மா சாந்தியடைய அடைக்கல
அன்னை வழியாக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்,

12/4, 2-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(7348)

மக்கள, மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

## நினைவு கூருகின்றோம் .. 1994-01-28

1986 ஆம்ஆண்டு இதேதினத்தில் மட்டு - மொறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் வீரச்சாவெய்திய-

❁ **எஸ். பாலையா** ( மொறக்கொட்டாஞ்சேனை- மட்டு. )

திருகோணமலை-மூதூர் பகுதியில் சிறிலங்காக் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சீலன்** (கணபதிப்பிள்ளை ஈஸ்வரன் - பாரதிபுரம்- திருகோணமலை)

திருகோணமலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுக் கடலில் வீசப்பட்ட, மூதூர் கட்டைபறிச்சானைச் சேர்ந்த 04 தமிழர்கள் கும்புறுப்பிட்டிப் பகுதியில் சுட்டுக் .கொல்லப்பட்ட 04 தமிழ் விவசாயி.

1987ஆம் ஆண்டு மட்டு - கொக்கட்டிச்சோலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர்மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**துரைசிங்கம்** (சா. துரைசிங்கம் -கோயில்போரதீவு மட்டு)

1988 ஆம் ஆண்டு மட்டு - கோவில்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**ரவி** (அழகையா ரவீந்திரன்-புதுக்குடியிருப்பு - மட்டு)

1989ஆம் ஆண்டு திருகோணமலை - மூதூர், கட்டைபறிச்சான் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**ரட்ணா** ( - )

யாழ்- அரியாலைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**லெப். ரட்ணா** (இராசநாயகம் இரத்தினகுமார் கொழும்புத்துறை - யாழ்)

இதே சுற்றிவளைப்பின்போது இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு யாழ் - மருத்துவமனையில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த-

**கணேஷ்** ( -அன்பழகன் -தேவாலயவீதி, சங்கானை யாழ்)

1992ஆம் ஆண்டு வவுனியா - தாண்டிக்குளம் சோதனை முகாமில் வைத்துச் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, இதேதினம் மகஸீன் சிறைச்சாலையில் மர்மமான முறையில் உயிரிழந்த தமிழ்ப்பெண்,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

❁ இக்குறியிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன்இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8468)


# தரமான போட்டோஸ்ரட் பிரதிகளுக்கு இளந்தென்றல் யாழ்ப்பாணம்

# அமெரிக்கா யார் பக்கம்?
# இந்தியா-பாக்கித்தான் போடும் குடுமிச்சண்டை

அமெரிக்க தயவைப் பெறுவதற்காக இன்று இந்தியாவும், பாக்கித்தானும் படாதபாடு படுகின்றன; ஓயாது போட்டி போடுகின்றன. பயன் என்னவோ இரு நாடுகட்கும் இடையிலான பகைமை முற்றிப் போனதுதான். ஏனென்றால் தென்னாசியப் பகுதி குறித்து அமெரிக்கா இப்போது அதிகம் அக்கறையற்று இருக்கின்றது. இந் நிலையில் சொந்த நலன்களை மையமாக வைத்து தமிழீழத்தில் தலையிட்டு அதன் எதிர்காலத்தைச் சிதைக்க முனைந்த இந்தியா, தமிழ்ஈழமக்களை கொன்றுகுவிக்க உதவி வழங்கிய பாக்கித்தான் இவர்கள் எல்லாம் அமெரிக்கா தத்தமது விடயத்தில் மட்டும் வேறு விதமாக நடக்கும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இது எம் மக்கள் எழுப்பும் வினா

அண்மைக்காலமாக மிகச் சுவையான இழுபறி நாடகமொன்று எமது தென்னாசியப் பகுதியில் அரங்கேறிவருவது எல்லோரினதும் கவனத்தை இப்போது ஈர்த்து வருகின்றது. ஒரு காலகட்டத்தில் பனிப்போர் நிலவிய போது வல்லரசுகளின் செல்லப்பிள்ளைகளாக உச்சத்திலிருந்தவர்கள் இன்று நட்டாற்றில் விடப்பட்டவர் போல் தடுமாறுகின்றனர்; தரையில் போட்ட மீனாக துடிக்கின்றனர். பனிப்போரின் பின் இந்தியாவும் பாக்கித்தானும் அமெரிக்க தயவு இப்போது தம் பக்கம் முழுமையாக திரும்பாதா என நப்பாசையோடு காத்துக் கிடக்கின்றனர். அது மட்டுமன்றி ஆளை ஆள் மாற்றி சேற்றை வாரியிறைத்து ஒருவர் காலை மற்றவர் இடறி விழுத்தும்ஒருமோசமான,அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். ஆனால் உண்மையான சருவதேச யதார்த்த அரசியல் நிலைமைகளை இவர்கள் புரியாமல் அமெரிக்க அரசியல் இலக்குகளை தெரியாமல் ஒரு பொய்மையான—மிகையான எதிர்பார்ப்புக்கள் மேல் கட்டப்படும் இவ்விரு நாடுகளினதும், குறிப்பாக இந்தியாவின் எண்ணக்கோட்டைகள் இன்று சரிந்து வீழ்வதே காணக்கிடைக்கும் காட்சியாகிறது இத்தகைய செயற்பாடுகள் இரு நாடுகள் தொடர்பான அமெரிக்கப் பார்வையை மேலும் கீழிறக்கவும், இருவர்க்கும் இடையிலான பிளவுகள்மேலும் அதிகரிக்கவும் வழிவகுத்ததேயன்றி வேறு பயனைத் தரவில்லை என்பதே ஆய்வாளர் கருத்து. கடந்த 3 வருடங்களாக மேற்கொண்ட இத்தகைய செயற்பாடுகளை விடுத்து தமக்கிடையின் உறவுகளைச் சீர்படுத்த முயன்றிருந்தால் இந்திய உபகண்ட முறுகல் நிலை இந்தளவுக்கு இன்றிருந்திராது என்பதே உண்மை என்றே இவர்கள் கூறுகின்றனர்.

இந்தியா இன்று சோவியத்தின் எதிர்பாரா வீழ்ச்சியின் பின் எல்லா வகையிலும் பெரும் பாதிப்பிற்குள்ளாகி விட்டது. எனவே இந் நிலையிலிருந்து மீள்வதற்கு, பிரதானவழி தனது வெளியுறவுக் கொள்கையில் பாரிய மாற்றத்தை செய்வதே என முடிவெடுத்தது. மூன்றாம் உலக நாடுகட்கு கொள்கை ரீதியாகத் தலைமை தாங்கும் தனது எண்ணத்தை பிராந்திய மேலாதிக்க கனவை எல்லாம் ஒரு புறம் தள்ளி வைத்துவிட்டு அமெரிக்க நிலைப்பாட்டிற்கு தன்னை ஆதரவு தெரிவிக்கும் நாடாக விளங்கும் நிலைக்கு இறங்கியது.

இக் கொள்கை மாற்றம் பெரும் நன்மையை தமக்கு விளைவிக்கும் என்றே இந்திய அரசியல்வாதிகள், வெளிவிவகார ஆலோசகர்கள், ஆய்வாளர்கள் எல்லாம் அடித்துக் கூறினர். சிலர் உலகின் இரு பெரிய சனநாயக நாடுகளும் இணைவதால் உலகே மாறிவிடும் என்ற அறைகூவலை விடுத்தனர். சிலரே மேற்காசியாவில்இசுரேலுக்கு ஒதுக்கப்பட்ட பாத்திரம் போல் தென்னாசியப்பிராந்தியத்தில் இந்தியாவிற்கு அமெரிக்கா இடமளிக்கும் எனக்கருதினர். 1980களில் இந்தியா சோவியத்முகாமிலிருந்தபோது இந்தியாவைக் கவர்வதற்கு அமெரிக்கா எடுத்த முயற்சிகளை — வழங்கிய சலுகைகளை இவர்கள் தமது வாதங்கட்கு ஆதாரமாக்கினர். எனவே மேற்குலக முதலீடுகட்கு வாய்ப்பாக தனது பொருள்மியக் கட்டமைப்பின் கட்டுப்பாடுகளை எல்லாம் இந்தியா தளர்த்தியது; ஐ. நா.வில் அமெரிக்காவின் முக்கிய தீர்மானங்களை ஆதரித்தது; அமெரிக்க வேண்டுகோளை ஏற்றுசோமாலியாவிற்கு படைகளை அனுப்பியது; உணவு அனுப்புமாறு காஸ்ட்ரோ கேட்டபோது மறுத்தது; இசுரவேலோடு கொஞ்சிக்குலாவியது. இவ்வாறாக அமெரிக்கா பக்கம் தாவியது

இவை எல்லாவற்றிற்கும் உச்சமாக இறுதியாக இன்னொரு காரியமும் செய்தது. சரிந்து போய்வரும் மேற்குலக, யப்பான் பொருளாதாரங்கட்கு முண்டு கொடுக்கும் வண்ணம் வரையப்பட்ட GATT எனப்படும் சருவதேச வாணிகம், வரிகள் தொடர்பான புதிய உடன்பாட்டை மறுபேச்சில்லாமல் ஏற்றது. இச் செயலானது மூன்றாம் உலக நாடுகளின் முதுகில் குத்தியது போலாகி விட்டது. மூன்றாம் உலக நாடுகளின் குரலை இனி சருவதேச அரங்கில் ஒலிக்கும் தகுதியை இந்தியா இழந்துவிட்டதாக, தனது சொந்த இறையாண்மையையே அடகு வைத்துவிட்ட முழு சரணாகதி இதுவென ராம் போன்ற இந்திய மேலாதிக்ககனவிலிருந்தோரேமிகக் கடுமையாகக் கண்டிக்குமளவு இந்திய அரசியல் தாழ்ந்து போய்விட்டது. சோமாலியாவில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறப் போவதால் ஏற்படப் போகும் மோசமான நிலைமைகளைககூட பொருட்படுத்தாது இந்தியா செயற்படுகின்றது. சோமாலிய மக்களின் சீற்றத்திற்கு அங்கு மிஞ்சியிருக்கப் போகும் இந்திய - பாக் படைகளே முகம் கொடுக்க வேண்டி வரும் என்கிற எச்சரிக்கைகளைக் கூட பொருட்படுத்தாது அமெரிக்கா தன்பக்கம் திரும்பும் என்றே இற்றை நாள்வரை இந்தியா செயற்பட்டது.

இவ்வளவற்றோடும் அமெரிக்க - பாக் உறவில் ஏற்பட்ட விரிசல்களை முழுமையாகப் பயன்படுத்தப் போவதாகக் கூறி பாக்கித்தானின் ISI (Inter Service Intelligence) எனப்படும் உளவு நிறுவனம் எவ்வாறு காஷ்மீரில், பஞ்சாப்பில், இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளில் அண்மையில் நடந்த பாரிய குண்டுவெடிப்புக்களின்பின்னணியில் செயற்படுவதற்கான ஆதாரங்களைத் திரட்டி அமெரிக்காவிற்கு வழங்கி பாக்கை பயங்கரவாத நாடாக்க முடிந்தளவு முயன்றது. அமெரிக்கா அறிவிக்க முன்னரே பாக்கித்தான் பயங்கரவாத நாடாக அமெரிக்கா அறிவிப்பது நிச்சயம் எனக் கூறியது. ஆனால் இன்று நடப்பதோ வேறு. இன்று அமெரிக்க நிலைப்பாடு இந்தியாவைப் பெரும் அதிர்ச்சிக்குள் தள்ளிவிட்டது.

கிட்டத்தட்ட பாக்கித்தான் கதையும் இதேபோலத்தான் இருக்கிறது. மிக முக்கியமான ஓரிடத்தை அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையால் பெற்றிருந்த பாக்கித்தான், ஆப்கான் மோதலின்போது பல் ஆயிரம் பிலியன் டொலர்களை, கணக்கற்ற கனரக ஆயுதங்களை பெற்று பெரும் வலிமை மிக்க நாடாகிய பாக்கித்தானுக்கு இன்று அமெரிக்கா தன்னைக் கைவிட்டதை இன்னமும் நம்பமுடியாமலிருப்பதாகக் கூறப்படுகின்றது. பாக்கித்தான் தன் சொல்வழி கேளா விட்டால் அதனை ஒரு பயங்கரவாத நாடாக அறிவிக்கும் அபாயம் உண்டென அமெரிக்கா இப்போது அடிக்கடி மிரட்டி வருகின்றது. அணுவாயுத உற்பத்தி தொடர்பாக அமெரிக்க நிபந்தனைகளை ஏற்காத நாடுகட்கு அமெரிக்காவின் சகல உதவிகளும் நிறுத்தப்பட வேண்டும் என்கிற அமெரிக்க செனட்டரான பிறெஸ்லர் (Pressler Amendment) கருத்துப்படி அக்டோபர் 1990ஆம் ஆண்டிலிருந்து பாக்கிற்கான அமெரிக்காவின் சகல இராணுவ, பொருளாதார உதவிகளும் நிறுத்தப்பட்டன. இந்தியாவை மாட்டிவைக்கும் நோக்கோடு தென்னாசியப் பிராந்தியத்தை அணுவாயுத சூனிய அமைதி பிராந்தியமாக்க வேண்டும் என்கிற அமெரிக்க ஆலோசனைக்குத் தான் முழு ஆதரவு என்று பாக்கித்தான் கூறியும் அமெரிக்காஇந்தியாமேல்பிறெஸ்லர் விதிகளை பிரயோகிக்காமல பாக்லேயேபிரயோகித்தது. (இதனாலே இந்தியா அமெரிக்கா பாக்கித்தானை இசுலாமிய அடிப்படைவாத நாடாகக் கணிக்கிறது என முழுமையாக நம்ப நேரிட்டது.)

எனவே நிலைமைகள்மோசமாவதை அவதானித்த பாக்கித்தான் தனது இசுலாமிய வாத கோட்பாடுகளை ஒரு புறம் தள்ளிவைத்து அமெரிக்காவை அமைதிப்படுத்த இப்போது முயல்கின்றது. எனவே மிகக் கூடுதலான படைகளை சோமாலியாவுககு அனுப்பிய பெருமையைதானேபெற்றது. தானாகவே ஒருதலைப்பட்சமாக தனது அணுவாயுத முயற்சிகளை இடைநிறுத்தி வைப்பதாக கூறியது காஷ்மீரில் இந்தியா மனித உரிமைகளை மீறும் அட்டூழியங்கள் பற்றி முடிந்தளவு சருவதேசமயப்படுத்தி இந்தியாவை இக்கட்டில் தள்ளி விடுகிறது

முன்னைப்போலவே தனது உளவு பாதுகாப்புத்துறைகளை மிகநெருக்கமாக அமெரிக்காவோடு இணைந்து செயலாற்ற பணித்துள்ளது. சுருக்கின் உறவுநிலை முன்னைய பொற்கால நிலைக்குப் போவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. பெனாசிர் பூட்டோ அம்மையார் பதவிக்கு வந்த பின் பாக்கோடு மென் நோக்கில் அமெரிக்கா செயற்பட்டாலும் முன்னைய விசேட நிலையை இனி பாக்கிற்கு வழங்காது என்பதே இப்போதைய நிலை.

ஏனென்றால் இப்போது அமெரிக்க வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தவரை தென்னாசியப் பிராந்தியம் எவ்வகையிலும் முக்கியம் பெறவில்லை என்றே அரசியல் வித்தகர்கள் கூறுகின்றனர். மேற்காசியப் பகுதி சீனா, மெக்சிக்கோ போன்ற நாடுகள் பகுதிகட்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் தென்னாசியப் பகுதி பெறப்போவதில்லை. தனக்கு சுமையற்ற செலவற்ற அதிகம் கரிசனையற்ற மேம்போக்கான மனித உரிமை மீறல், பயங்கரவாதம், சனநாயகம், அணுவாயுத பரம்பல் தடை என ஒப்புக்கு பேச்சளவில் நடு நிலைப்பாட்டை இப்பகுதி பற்றி அமெரிக்கா கூறிவருகின்றது. இப்பகுதியின் இரண்டு பிரதான நாடுகட்கும் எதுவிதமான கனரக பாரம்பரிய ஆயுத விற்பனையை இப்போதைக்குமேற்கொள்வதில்லையென அமெரிக்கா தீர்மானித்துள்ளதாக தெரிகின்றது. தென்னாசியப் பகுதியில் தனக்கு எவ்வகையிலும் போட்டாபோட்டி அல்லது பெரும் அச்சுறுத்தல்கள் இருப்பதாக அமெரிக்கா இப்போதைக்கு கருதவில்லை என்பதே உண்மை என்பதை இப்போது இந்திய அரசியல் ஆய்வாளர்களே ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது இந்திய பாக் சிக்கலில்நடுவராக தலையிடும் எண்ணம்கூட அமெரிக்காவிற்கு கிடையாது என்றும் சிலர் கூறுகின்றனர் நிலைமைகள் மோசமடைந்தால் அத்தகைய தருணங்களில் மட்டுமே குறிப்பாக அமெரிக்கா தலையிடக்கூடும் என்றே இவர்கள் கூறுகின்றனர்.

எனவே காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள கிளம்பி தனது உத்திகளை தானே சிறப்பித்து பெருமைப்பட்ட இந்தியா, எப்போதும் அடுத்தவரை நம்பியே வளர்ந்த பாகித்தானும் தென்னாசியா தொடர்பான அமெரிக்க அக்கறையின்மை காரணமாக இன்று அதிகம் அவதிப்படுகின்றன. எனினும் அண்மைக்கால கிளிண்டன் போக்கு இந்தியாவுக்கு கூடுதலாக பாதிப்புஏற்படுத்துவதைஇப்போது இந்தியாவே உணரத் தலைப்பட்டுள்ளது. ஏற்கனவே காஷ்மீரில் மனித உரிமை மீறல் தொடர்பாகவும் அதன் எதிர் காலம் குறித்தும் இந்தியாவின் நிலையை கிளிண்டன் ஆதரிக்காததால் மூக்குடைபட்டிருந்தது இந்தியா இப்போது பிறெஸ்லர் விதிகளை பாக்கின் மேல் விதிக்கப்பட்டதை நீக்கிவிட எடுத்த அமெரிக்காவின் முடிவானது இந்திய வெளிவிவகார அமைச்சை பெருத்த ஆச்சரியத்திலும் குழப்பத்திலும் ஆழ்த்தியிருப்பதாக தெரிகின்றது பிறெஸ்லர் திருத்தங்களை பாக்கின் மேல் இப்போது விதிக்காத நிலையில் இந்தியாவினதும் பாக்கித்தானினதும் அணுவாயுத முயற்சிகளை ஒரே அளவுகோல் கொண்டு கணிப்பிடப்படப் போவதோடு பாக்கின் அணுவாயுத தயாரிப்புக்கள் தொடர்பான கூர்மையான கவனிப்பு இனி இல்லாது போகப் போகின்றது. உடனடியாக உதவிகளை திரும்ப வழங்குவதில்லையென அமெரிக்கா தீர்மானித்த போதும் பிறெஸ்லரின் தடை விதிக்கப்பட முன் பாக்கித்தான் அமெரிக்காவோடு செய்து கொண்ட உடன்பாட்டின் படி அதிநவீன F16 ரக போர் விமானங்களைப்பெறும் வாய்ப்பு இருப்பதாக தெரிகின்றது. ஏற்கனவே 40 வீதமான பணம் செலுத்தப்பட்ட நிலையில் உடனடியாகவே தனது பாவிப்பில் இல்லாத பல F16 விமானங்கட்குப்பதிலாக 11 விமானங்களை உடன் தருமாறு பாக் இப்போது கேட்டுள்ளது மோசமான பொருளாதார நிலையிலிருக்கும் அமெரிக்கா விமான உற்பத்தியாளர் பாக்கிற்கு F16 விற்பனவை நிச்சயமாக விரும்புவர் எனவே இப்போது இந்தியாவுக்கு மேலும் சிக்கல் சோவியத்தால் வழங்கப்பட்ட அரைப் பங்கிற்கு மேற்பட்ட தாங்கிகள், கனரக வாகனங்கள் 2/3 பங்கு பீரங்கிகட்கு மாற்று உதிரிப்பாகங்கள் கிடைக்காமையால் அல்லலுறும் இந்தியாவிற்கு இது ஒரு பின்னடைவாகக் கருதப்படுகின்றது.

எல்லாவற்றையும் விட மிக அண்மையில் மீண்டும் சனாதிபதி கிளிண்டன் இந்தியாவின் மோசமான மனித உரிமைகள் மீறல் பற்றி கண்டனம் தெரிவித்தார்.

இம் முறை அவர் குறிப்பிட்ட பகுதிகாஷ்மீர் அல்ல பஞ்சாப். பஞ்சாப்பில் அமைதியை ஏற்படுத்தி விட்டதாக இந்தியா பெருமையடித்த நிலையில் கிளிண்டனின் கண்டனம் இந்திய நிலையை சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டியின் நிலைக்கு தள்ளிவிட்டது. தனது அரசியல் ஞானிகளின் கருத்துக் கணிப்பெல்லாம் பொய்த்த நிலையில் இந்தியா பாக்கித்தான் தொடர்பாக அதன் ISI உளவு அமைப்பு தொடர்பாக பாரிய கண்டனங்களைத் தொடுத்து வருகிறது. பத்தாயிரத்திற்கு மேற்பட்ட முன்னாள் ஆப்கான் போராளிகட்கு மீண்டும் பயிற்சி கொடுத்து காஷ்மீரிற்குள் பாக்அனுப்பத்தொடங்கிவிட்டதாகஅலறுகின்றது. ஓரளவு அமைதிப்போக்கினை கடைப்பிடிப்பவர் என்று கருதப்படும் பெனாசிர் அம்மையாரும் பதிலுக்குப் பதில் என அறைகூவல்கள்விடுக்கத் தொடங்கிவிட்டார். எனவே எல்லாமே மீண்டும் தொடங்கிய இடத்திற்கே வந்து விட்டது. இந்தியா பாக் தொடர்பான இராணுவ சமநிலையொன்றை தொடர்ந்து பேண அமெரிக்கா விரும்புவதாக தெரிவதே இப்போதுள்ள நிலைமையாகும்.

இத்தகைய சூழலில் உலகின் கவலை என்னவென்றால் பல பத்துஅணுக்குண்டுகளைதயாரிக்கும் வல்லமை பெற்ற நாடுகள் இரண்டும் மோதினால் என்னவாகும் என்பது தான். ஆனால் தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில் ஏற்கனவே துலங்கிய வரலாற்றுண்மையொன்று மீண்டும்உறுதி செய்யப்படுகின்றது.

அதாவது இன்றைய உலக அரசியல் என்பது எவர் எந்தப்பக்கம் சாய்கிறார் என்பதைப் பொறுத்து அமையவில்லை யதார்த்த அரசியல் சூழலில் சொந்த நலன்கள் என்கிற பின்னணியில் தீர்மானிக்கப்படுகின்றது என்பதே அது. அதேசமயம்தமிழீழம்உள்ளிட்ட ஏனைய அண்டை நாடுகள் தொடர்பாக தனது நலன்களை மையமாக வைத்துச் செயற்படும் இந்தியா தனது விடயத்தில் மட்டும் அமெரிக்கா வேறு விதமாகச் செயற்படும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும் என்பதே எம்மக்கள் இன்று எழுப்பும் வினா.

பாலகுமாரன்

## எமது கல்விப் பிரச்சினைகள்

# "பாடசாலைகள் சமூகப் பொறுப்புடன் நடந்தால் தனியார் கல்வி நிலையங்கள் மெல்லச் சாகும்"

### துணைவேந்தர் துரைராசாவுடன் ஒரு சந்திப்பு

சந்தித்தவர்: மதன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஏ.துரைராசா அவர்களைச் சமீபத்தில் அவர் இல்லத்தில் சந்திக்க நேர்ந்தபோது காய்ச்சலின் மத்தியிலும் மிக உற்சாகமாகப் பேசினார். அவருடைய உற்சாகம் கொஞ்சம் ஆச்சரியம் அளிக்கவே செய்தது. பல்கலைக்கழகக் கல்வித்துறை அம்சங்களை மட்டுமல்லாமல் சமகாலக் கல்விப் பிரச்சினைகளைப் பொறுப்புணர்வுடனும், நிதானத்துடனும் ஆராய்ந்து தொலைநோக்குடன் சிந்திக்கிறார்.
அவரே தொடர்ந்தார்:

''இலங்கையில் காலத்துக்குக் காலம் ஒவ்வொரு புதிய அரசு உருவாகும்போதும், அரசியல் அழுத்தம் அதிகரிக்கும் போதும் புதிய கல்விக் கொள்கைகள் உருவாகின்றன. எனினும், 1954 க்கு முந்திய காலப் பகுதியில் கல்வியில் அரசின் ஈடுபாடு குறைவு. இத்தகைய சூழலில் அரசின் ஆதிக்கம் குறைந்ததாக அன்றைய பல்கலைக்கழகக் கல்வி இருந்தது. 1954இல் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்துக்கு இருபத்திநான்கு தமிழ் மாணவர்களும், நான்கு சிங்கள மாணவர்களும் அனுமதி பெற்றார்கள். விஞ்ஞானம் போன்ற ஏனைய துறைகளுக்கும் இந்நிலை தொடர்வதைக் கண்ட தென்னிலங்கை அரசியல் கட்சிகள் தங்கள் அரசியல் ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கான உபாயங்களில் ஒன்றாகக் கல்வியைப் பயன்படுத்தின. இலங்கையின் 3-வது பாராளுமன்றத்தில், 1956 - 59 காலப் பகுதியில் பண்டாரநாயக்கா அமைச்சரவையில் கலாநிதி தஹநாயக்கா கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் இனவாத அரசியல் நோக்கத்துடன் பல்கலைக்கழகக் கல்வியை சிறிலங்கா சுதந்திரக் கட்சி அணுகியது. தமிழ் மாணவர்களைக் கூடுதலாகப் பேராதனை பல்கலைக்கழகத்தில் அனுமதித்தால் பேராதனையில் இனக்கலவரம் தலைதூக்கலாம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி பட்டவர்த்தனமாகக் கூறியது. சிறிமாவோ பண்டாரநாயக்கா (1970 - 77) ஆட்சிக்காலத்தில் பதியுதீன் முகமெட் கல்வி அமைச்சராக இருந்தபோது சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இனவாதம் கோலோச்சியது. 1970 - 74 ஆம் ஆண்டுவரை பல்கலைக்கழக் அனுமதி, மொழிவாரியான தரப்படுத்தலினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதனால் தமிழ்மக்களுடைய பல்கலைக்கழகக் கல்வி பாதிப்புக்குள்ளாகியது. சொல்லப்போனால் கவனத்தோடு படிக்கும் தமிழ் மாணவர்கள் விரக்தியடைந்து கொடுமையைச் சகித்துக் கொள்ளாமல் அரசுக்கெதிராக ஆயுதம் தூக்கினார்கள்'' என்று துணைவேந்தர் உறுதியாகப் பேசினார்.

''அடுத்தடுத்து வந்த சிங்கள அரசுகள், எந்தக் கட்சி அரசானாலும் சிங்கள மக்களின்கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன் செயற்பட்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் செயலுக்கும் பின்னால் இனவாதம் காணப்பட்டது. 1974 | 75ஆம் கல்வி ஆண்டில் மொழிவாரியான தரப்படுத்தலுடன் மாவட்ட அடிப்படையிலான ஒதுக்கீடும் இணைந்த அனுமதி முறை அமுல்படுத்தப்பட்டது. இதனாலும் சிங்கள மாணவர்கள் தான் அதிகமான பயனைப் பெற்றார்கள். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பது போல தமிழ் மாணவர்கள் கிடைப்பதைப் பயன்படுத்தினார்கள். 1977 பொதுத் தேர்தலில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு பல்கலைக்கழக அனுமதி முறையை மாற்றி அமைப்பதற்கு அவசரத்துடன் செயல்பட்டார். மொழி மற்றும் இனம் என்ற சொற் பிரயோகங்கள் கைவிடப்பட்டு 1978ஆம் ஆண்டில்மிக நாசுக்காக புதிய அனுமதி முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. அதாவது தேசிய ரீதியில் 30 விகிதம் திறமை அடிப்படையிலும், 55 விகிதம் மாவட்ட ரீதியான திறமை அடிப்படையிலும், மிகுதி 15விகிதம் பின்தங்கிய பிரதேச திறமை அடிப்படையிலும் அனுமதித்தார்கள்'' என்று குறிப்பிட்டுவிட்டு, 'இப்போது திறமை அடிப்படையில் 40 விகிதம், மாவட்ட அடிப்படையில் 55 விகிதம், பின்தங்கிய பிரதேசம் 5 விகிதம் என்று மாற்றிவிட்டார்கள்' என்றார்.



''தொழில் சார் திறமையுள்ள இளைஞர்களை உருவாக்கும் பணியில் கல்வி நிலையங்கள் கவனம் செலுத்த வேண்டும். உண்மையான கல்வியானது உற்பத்திக்கான உழைப்புடன் பிணைந்ததாகவே இருக்க முடியும். இது எங்கள் சமூக உருவாக்கத்துக்கு மிக முக்கியமானது''

மேற்குறிப்பிடப்பட்ட பிரதேச விகிதாசார அடிப்படையிலான அனுமதி முறையால் தமிழ் மாணவர்கள் போதிய பயன்பெறவில்லை என்றே கூறவேண்டும் சிங்கள மாணவர்கள் மாவட்ட ரீதியான அடிப்படையில் அனுமதி பெறுவது குறைந்தாலும் பின்தங்கிய பிரதேச அடிப்படையில் அதை ஈடு செய்து கொள்கிறார்கள். அத்துடன் கொழும்பு, கண்டி, பதுளை போன்ற இடங்களிலுள்ள பண வசதியுள்ளவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களிலும் (Tutory), சுயநிதிக் கல்லூரிகளிலும் (Private Schools) சேர்ந்து தமிழ் மாணவர்களுக்கு ஏட்டிக்குப் போட்டியாகக கல்வி பயில்கிறார்கள். இப்போது பொருள்வளமும், சமுதாய அந்தஸ்தும் உள்ள சிங்களவர் மத்தியில் கல்வியை ஊக்குவிக்கும் போக்கும் காணப்படுகிறது. கல்விச் செலவுக்கான முழுத்தொகையையும், நன்கொடையையும் கொடுத்துப் பயிலும் வழக்கம் சிங்களவர் மத்தியில் வேகமாகப் பரவி வருகிறது. ஆட்சியாளர்களும் சிங்கள மாணவர்களின் கல்வியை ஊக்குவித்து வருகிறார்கள். இதனால் சிங்கள மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி இப்போது அதிகரித்துள்ளது. இந்தச் சூழலில் பல்கலைக்கழக அனுமதியில் சிங்கள-தமிழ் மாணவரிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கவே செய்யும். உதாரணமாக 1989 க்குப் பிறகு கலைப்பாடங்களிலும் திறமை அடிப்படையில் பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறும் சிங்கள மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பேராசிரியர் கே.குணரெட்ணம் மேற்கொண்ட ஓர் ஆய்வின்படி 1990 க்கு முந்திய ஐந்துவருடங்களில் தமிழ்மாணவர்களின் பெறுபேறுகள் தாழ்ந்து காணப்படுகின்றன. பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக வழக்கு வைத்ததின்பேரில் தீர்ப்பு வழங்கப்பட்டதன் காரணமாக நீதிமன்றத்தை அவமதிக்கக்கூடாது என்பதற்காக மொறட்டுவப் பல்கலைக் கழகத்திற்கு சுமார் 39 தமிழ் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள் அதுவும் பொறியியல் துறைக்கு மாத்திரம்தான்',- இவ்வாறு கூறினார்.

''இந்த இடத்தில் தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகள் பற்றிக் கொஞ்சம் சொல்லியாக வேண்டும்'' என்ற அவர்

''இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் தனியார்கல்வி நிறுவனங்களின் ஆதிக்கத்தை இல்லாமல் செய்வதன் மூலம் தமிழ் மாணவர்களின் கல்வியை வளர்க்க முடியாது. எமது பள்ளிக்கூடங்களைச் சீர்செய்வதன் மூலமும், கல்வியை சீராகக் கற்பிப்பதன் மூலமும் மட்டுமே இந்நிலை மாற்றப்பட வேண்டும். இருக்கிற தனியார் கல்வி நிறுவனங்களை இழுத்து மூடிவிடுவதால் பின்னடைவைப் போக்கி விடலாம் என்று எண்ணுவது தவறு. அதனால் தனியார் கல்வி நிறுவனங்கள்தான் சிறந்த கல்வி நிலையங்கள் என்று நான் கூற முன்வரவில்லை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் காரணமாக இத்தகைய தனியார் கல்வி நிறுவனங்களால் பணக்கார வர்க்கத்தினரே பயன் பெறுவர் என்பது உண்மை. வசதி உள்ளவர்கள் சிலர் ஒரு பாடத்துக்கு இரண்டு ரியூஷனுக்குப் பிள்ளைகளை அனுப்பும் வழக்கமும் காணப்படுகிறது. வசதியற்ற பிள்ளைகள் சாதாரண பள்ளிகளில் படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமது பள்ளிக்கூடங்கள் சமூகப் பொறுப்புடனும், அர்ப்பணிப்புடனும் கல்வி வழங்கினால் இந்நிலை உருவாகாது தனியார் கல்வி நிலையங்கள் மெல்லச் சாகும். அண்மைக் காலப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்த்தால் எமது அரச பள்ளிக்கூடங்களின் நிலை தெரிகிறது. வடமராட்சியில் 1992 க.பொ.த. சாதாரணதரப்பரீட்சைக்கு 2000பேர் தோற்றினார்கள். 65விகிதம்மாணவர்கள்விஞ்ஞானத்திலும், கணிதத்திலும் கோட்டை விட்டுள்ளார்கள். அவமானமாக இல்லையா இது? 'தமிழ் மாணவர்களின் கல்வித் தரம் குறைந்துவிட்டது. இதற்கு ஏதாவது பரிகாரம் நீங்கள் தேட வேண்டும்' என்று பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல என்னிடம் பிரஸ்தாபித்துள்ளார். சுற்றாடலில் உள்ள மக்களுக்கும், பள்ளிக்கூட அதிபருக்கும் அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். ஆசிரியருக்கு ஒரு இமேஜ் இருக்க வேண்டும். எல்லோரும் ஆசிரியராக வரமுடியாது. அதற்கும் ஒரு அர்ப்பணிப்பு வேண்டும். ஆசிரியர் ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும் கற்பித்தல் தொழிலில் கரிசனையுடன் ஈடுபட வேண்டும். 1992 இல் வடமாகாணத்தில் 15 பேருக்குப் பொறியியல் கிடைத்துள்ளது விஸாக்காவில் 65 பேருக்குப் பொறியியல் கிடைத்துள்ளது. என்றால் பாருங்களேன். இந்த நிலையில் தனியார் கல்வி நிறுவனங்களைக் குழப்பினால் எமது கல்வியில் இன்னும் பின்னடைவு ஏற்படும் பள்ளிக்கூடங்களைத் திருத்துங்கள். எல்லாம் சரியாகி விடும்''

என்றார். மெல்லச் சிரித்தார், சிரிப்பில் வேதனையா? அல்லது வேதனையே சிரிப்பாயிற்றா என்று எமக்குப் புரியவில்லை-

1991 விசேட பரீட்சை பற்றிக் கேட்டபோது-

''கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பரீட்சையை அரசு நடத்தியது. அத்துடன் தமிழ் மாணவர்களின் பெறுபேறுகள் குறைந்தமைக்கும் அரசுதான் முக்கிய காரணம் போரின் பாதிப்பினால் பெறுபேறுகள் குறையைத்தான் செய்யும். அரசுதான் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் அந்த வருடத்துக்கு மாத்திரம் முந்திய ஐந்து வருடச் சராசரியைப் பேணும்படி கேட்டோம் அரசு செவிமடுக்கவில்லை. இந்த விஷயத்தில் பெற்றோர்கள் தூங்காதீர்கள் முன் கூட்டியே அனுமானித்து நாம் ஒரு முடிவெடுக்க வேண்டும் பெற்றோர் ஊக்கமெடுக்க வேண்டும். வருங்காலத்தில் மாவட்ட அடிப்படையிலான அனுமதி குறைக்கப்படலாம். இது குறித்து இப்போது ஆராய்ந்து வரும் ஆணைக்குழு அவ்வாறு பரிந்துரைக்கும். மாவட்ட அடிப்படையில்பல்கலைக் கழகங்களில் நுழையத் தமிழ் மாணவர்களுக்கு வாய்ப்புக் குறையும் அப்போது வீண் கவலைப்பட்டும் பயனில்லை இனி மேலாவது நிலமையைப் புரிந்து கொண்டு நடக்க வேணும்'' என்று நிதானமாய்ப் பேசினார்.

''பரீட்சையின் நம்பகத் தன்மையைக் கட்டுப்படுத்திக் காப்பாற்றுவது அவசியம். அல்லது பரீட்சையில் நம்பிக்கையில்லாதுபோய்விடும். பரீட்சை புனிதமானது தவறுகளைத் தடை செய்வது எப்போதும் இயலாதது தான் என்றாலும் தவறு செய்தால் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் அத்துடன் அந்தப் பரீட்சையை அல்லது குறிப்பிட்ட பாடத்தைத் திருப்பி நடத்த வேண்டும் பரீட்சையில் நம்பிக்கை மோசடி செய்யும் ஆசிரியர்கள் அந்தத் தொழிலுக்கு லாயக்கற்றவர்கள் பேராதனை மற்றும் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பரீட்சை வினாத்தாள்களை வெளியிட்ட ஆசிரியர்கள் பதவிநீக்கம் செய்யப்பட்டார்கள். பல்கலைக் கழகங்களில் பரீட்சை வினாத்தாள் பற்றிய ஒழுங்கு மிகவும் வற்புறுத்தப்பட்ட விஷயம்'' என்றார்.

தொழிற் கல்வியைப் பற்றிக் கூறிய அவர்,

இரண்டு விகிதமான தமிழ் மாணவர்கள் தான் பல்கலைக்கழகம் செல்கிறார்கள் மற்றவர்கள் பல்கலைக் கழகப் படிக்கட்டை எட்டியும் பார்ப்பதில்லை. ஆயிரக்கணக்கானோர் பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டு அலையும் இந்தத் தமிழ் சூழலில் பயன் யொருத்தமான சமுதாய உறுப்பினர்களாக மாறுவதற்கு தொழில் கல்வியை நாடவேண்டும். தொழில்சார் திறமையுள்ள இளைஞர்களை உருவாக்கும் பணியில் கல்வி நிலையங்கள் கவனம் செலுத்தவேண்டும் உண்மையானகல்வியானது உற்பத்திக்கான உழைப்புடன் பிணைந்ததாகவே இருக்க முடியும். இது எங்கள் சமூக உருவாக்கத்துக்கு முக்கியமானது. என் மனதிலே இருக்கிறதை நான் சொல்லிவிட்டேன்.'' என்று பரிவுடன் கூறி எழுந்து விடை பெற்றுக் கொண்டார்.

## சிறுகதை

# சபதம்

**மலரன்னை**

தன்முன் பரந்து கிடந்த நீலக்கடலை வெறித்து நோக்கிக்கொண்டிருந்தார் செபமாலைக் கிழவர். கடலலைகள் பெரும் பூகம்பமாய்ப் பொங்கி எழுந்து வந்து கரையுடன் மோதிச் சங்கமமாயின. இதனைக கண்ணுற்ற கிழவரின் உள்ளத்தில் ஓர் வேதனை தன் மகனது உயிரற்ற சடலத்தையும் இப்படியொரு அலைதான் கொண்டுவந்து கரையில் ஒதுக்கியிருக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டதன் பிரதிபலிப்பாய் அவரது கண்களை நீர் திரையிட்டுப் பார்வையை மறைத்தது.

அவரது நினைவுகளோ பின்நோக்கிப் பாயத்தொடங்கியது. அவரது ஒரேயொரு மகனான ஜோசேப்-அவனை அவர் வளர்த்த விதம் -அவனது பிரிவு- எல்லாம் வரிசைக்கிரமத்தில் அவரது மனத்திரையில் வந்து போனதன் விளைவு- அவரது நெஞ்சம் ஒருமுறை விம்மித்தணிந்தது. அடிவயிற்றில் ஏதோ பிசைவது போன்ற உணர்வு- இதற்குப் பெயர்தான் பெற்ற பாசமோ?

செபமாலை காலங்காலமாய் கடற்றொழில் செய்து சீவியம் நடத்தி வந்தவர். ஏதோ வருவாய் என்று பெரிதாக இல்லாவிட்டாலுங்கூட, சீராகவே அவரது வாழ்க்கை போய்க்கொண்டிருந்தது. திருமணஞ் செய்து எட்டு ஆண்டுகளின் பின்னர்தான் ஜோசேப் அவர்களுக்கு மகனாகப் பிறந்தான். மகன் மீது கொள்ளை அன்பைக் கொட்டி வளர்த்த அவர், அவனையும் தன்னைப்போல கடற்றொழில் செய்து கஷ்டத்தை அனுபவிக்கவிடாமல் ஒரு சிறு உத்தியோகத்திற்காவது படிக்க வைத்து விடவேண்டுமெனப் பெரும் பிரயத்தனப் பட்டார். ஆனால் ஜோசேப்பிற்குப் படிப்பில் நாட்டம் செல்லவில்லைதவிர பள்ளிக்குப் போய் வீண் வம்புகளை விலைக்கு வாங்கி வந்தான்.

எட்டாம் வகுப்புடன் அவனது படிப்பு நின்று விட்டது. தகப்பனுடன் கடலுக்குப் போய் வரத்தொடங்கினான். அவனுக்குத் தனது தங்கையின் மகள் மெற்றில்டாவைத் திருமணஞ் செய்துவைத்தார் செபமாலை மருமகளின் வரவால் வீடு களை கட்டியது. ஜோசேப் நண்டும் சிண்டுமாக நான்கு குழந்தைகளுக்குத் தந்தையாகி விட்டான். மூத்தவன் றொபின் மற்றைய மூவரும் பெண்கள். செபமாலைக்குப் பேரப்பிள்ளைகளைச் சீராட்டுவதில் பொழுது போவதே தெரியாமல் காலம் போய்க் கொண்டிருந்தது.

சென்ற வருடம்தான் அவரது மனைவி கண்ணை மூடிக் கொண்டுவிட்டாள், மனைவியின் இழப்பினால் சிறிது ஆடித்தான் போய்விட்டார், செபமாலை. இருந்தாலும் பேரக்குஞ்சுகளின் மழலையில் தன் துயர் மறந்திருந்தார். மெற்றில்டா தான் மாமியாரின் பிரிவினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டாள். செபமாலைக்கும் வயது போய்விட்டதனால், கடற்றொழிலுக்குப் போவதை எப்போதோ நிறுத்தி விட்டிருந்தார். மருமகளுக்கு ஒத்தாசையாக ஏதும் செய்து கொடுப்பார். தேவை ஏற்பட்டால், வலைகளைப் பொத்திக் கொடுப்பார். இப்படியே அமைதியாகப் போய்க் கொண்டிருந்தது அவரது வாழ்க்கை.

அந்த அமைதிக்கும் ஒரு நாள் பங்கம் வந்துவிட்டது. ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கப் போன ஜோசேப் திரும்பி வரவில்லை.

'கடலுக்கை மீன்பிடிக்கப் போனவையை நேவிக்காறன்கள் சுட்டுப்போட்டாங்களாம்.'

காட்டுத்தீ போலப் பரவியது இச் செய்தி. செபமாலைக் கிழவர் அவலத்துடன் அந்தோனியாரிடம் ஓடினார். ஆலயத்தில், புனித அந்தோனியாரின் முன் முழந்தாளிட்டுச் சிலுவையிட்டுக் கொண்டவர், ஜெபிக்கத் தொடங்கினார்.

'புனித அந்தோனியாரே திருச்சபையின் தூணே, அருளின் போதகரே, உலகத்தை அடக்குகிறவரே, புண்ணியங்களை விதைக்கிறவரே, வேதனைப் படுகிறவர்களுக்கு ஆறுதல் கொடுப்பவரே...,அவரது வாய் இந்த வரிகளையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தது.

அந்தோனியாரிடம் இவரது வேண்டுதல் பலிக்கவில்லை ஜோசேப் வீடு திரும்பவே இல்லை. தவிர அவனது வெற்றுடல் கூடக் கரை ஒதுங்கவில்லை. கிழவர், கடற்கரையிலேயே இருந்து கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். மகனது சடலம் வராமல் தான் வீட்டிற்குப் போவதில்லை எனத் தன் மனத்தில் சபதம் ஏற்றுக்கொண்டார். எவ்வளவோ பேர் வந்து அழைத்தும், அவர் அவ்விடத்தை விட்டு அசையவில்லை.

அன்று ஆறாவது நாள். பேப்பரும் கையுமாக பிரான்ஸிஸ் மாஸ்டர் அவரிடம் வந்தார்.

பருத்தித்துறைக் கடலில் கடற்படை-புலிகள் மோதல். ஒன்பது கடற்புலிகளையும், அவர்களது படகுகளையும் கடற்படை தாக்கி அழித்து விட்டதாகச் சிறிலங்கா வானொலி அறிவித்தது.

மாஸ்டர், கிழவருக்குச் செய்தியை வாசித்துக்காட்டினார். கிழவர், மனந்தளர்ந்துபோய், நடக்கவும் சென்பில்லாமல் கிடந்தார். இருந்தாலும் அவர் வாய் வல்லமையை இழக்கவில்லை.

''பாழ்பட்டுப் போவாங்கள், வயித்துப் பிழைப்புக்கு மீன்பிடிக்கவெண்டு போனவங்களைச் சுட்டுக்கொண்டு போட்டுக் கதை விடுறாங்கள். உவங்கள்கூண்டோடை அழிஞ்சு போகப் போறாங்கள். என்ரை சாபம் பலிக்காமல் போகாது.''

திட்டித் தீர்த்தார் கிழவர் சிறிது நேரத்தில் யார், யாரோ வந்து அவரை வலுக்கட்டாயமாக வீட்டிற்கு அழைத்துப் போனார்கள். ஜோசேப்பின் சடலம் எங்கோ தொலைவில் கரை ஒதுங்கி, அடையாளங் காணப்பட்டிருப்பதாகப் பேசிக்கொண்டார்கள். செபமாலை மகனது உடலையாவது பார்த்துவிடவேண்டுமெனத் துடியாய்த்துடித்தார் மெற்றில்டாவும், பிள்ளைகளும் பெட்டியின் மேல் விழுந்துகதறினர். ஆனால்... மூடிய பெட்டியைத் திறக்காமலே ஜோசேப்பின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

கிழவர் நடைப்பிணமாகி விட்டார். ஒரேயொரு மகனை எத்தனைபாசத்தைக் கொட்டி வளர்த்தார் அவர். அவனுக்கு ஏற்படும் ஒரு சிறு துன்பத்தையும் தாங்க முடியாமல் இருந்தவர், எப்படி அவனை இழந்த பின் இன்னும் உயிருடன் இருக்கிறார்? தன்னையே கேட்டுக் கொண்டார்.

''டேய் ஜோசேப்! உன்னை நான் வளத்த வளப்பென்ன? உனக்கு மேல் நான் வைச்சிருந்த பாசம் என்ன? இப்ப நீ என்னை விட்டிட்டுப் போயிட்டாய், ஆனால்... உன்னைக் கொண்டவனை நான் பழிவாங்கேலாமல் இருக்கிறனே! அதுதான்றா என்னை வதைக்கிது. எப்பிடியடா அவங்களைப் பழிவாங்கப் போறன்?''

குலுங்கிக்குலுங்கி அழுதார் கிழவர். அழுது ஓய்ந்தவரின் மனதில் சிறிது தெளிவு ஏற்பட்டது. தோளில் போட்டிருந்த துவாய்த் துண்டினால் கண்களை அழுந்தத் துடைத்துக் கொண்டார். தூரத்தில் யாரோ ஒரு பையன் வருவதாகத் தோன்றியது. உற்றுப் பார்த்தார். ஒருவேளை தனது பேரன், றொபின்தான் தன்னைத் தேடி வருகிறானோ! என்று நினைத்தார் அந்தப் பையன்வாயில் ஏதோ பாட்டை முணு முணுத்தவாறு அவரை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

''எங்களின் கடலிலே
எவன் எம்மைப் பிடிப்பது
எங்களின் படகினை
எவன் இங்கு தடுப்பது''

கிழவருக்குப் பாடலின் வரிகளைக் கேட்டதும் புதுத்தென்பு பிறந்தது. இது எங்கடை கடல். நாங்கள் பரம்பரை பரம்பரையாய்த் தொழில் செய்த கடல், இந்தக் கடல் மாதாவின் கருணையாலதான் நாங்கள் வயிற்றைக்கழுவிக் கொண்டிருக்கிறம். இனிமேல்.. இந்தக் குடும்பம் எப்பிடிச்சீவிக்கப் போகுது?... அவரது மனதில் பெரியதொரு கேள்விக்குறி? ...

ஆண்டவர் கைவிடமாட், டார்'

நம்பிக்கையும் கூடவே தோன்றியது.

இதற்குள் கிழவரை நெருங்கி வந்த பையன், ''அப்பு! றொபினைக் காணயில்லை எண்டு அவையின்ரை அம்மா அழுது கொண்டிருக்கிறா. உங்களைக் கையோட கூட்டிக் கொண்டு வரட்டாம்''

'என்னடா மேனை! றொபினைக் காணேல்லையோ?'

அவரது மூளையில் ஏதோ உறைத்தது. நேற்று இரவுநடந்த சம்பவத்தை இரை மீட்டுக் கொண்டார் அவர்.

பிள்ளைகள் எல்லோரும் நித்திரைக்குப் போய்விட்டனர். மெற்றில்டா மட்டும் முற்றத்தில் குந்தியிருந்தாள். இடையிடையே அவளது விம்மல் ஒலி கிழவரை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. படுத்திருந்த அவர் எழும்பித்திண்ணைக் குந்தில் இருந்து கொண்டார். அவருக்குஎல்லாமே சூனியமாகத் தோன்றியது. மடிக்குள் கையை விட்டுத் துழாவியவர் சுருட்டு ஒன்றை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டார். புகையை உள்ளே இழுத்து ஊதி வெளியில் விடும்பொழுது, தனது துயரத்தையும் சேர்த்து ஊதிவிடலாமெனஎண்ணினாரோ? என்னவோ!

திடீரென தாயினருகில் வந்து றொபின் ''அம்மா'' என்று அழைத்தான். அவள் நிமிர்ந்து மகனைப் பார்த்தாள். விழிகளிலிருந்து நீர் அருவியெனப் பாய்ந்தது. அவளருகில்அமர்ந்துகொண்ட றொபின், தாயின் கண்ணீரைத் தனது கையால் துடைத்துவிட்டு''அழாதைங்கம்மா உங்களைப்போல இன்னும் எத்தினை பேர் எங்கடை ஊரில இப்பிடி அழுது கொண்டிருப்பினம் இந்தக் கண்ணீருக்குஒரு முடிவு வரவேணும்''

சொல்லிக் கொண்டே பற்களை நறநறவென்று கடித்தான்

''எங்கடை அப்பாவைச் சுட்டவன்களை நான் பழி வாங்காமல் விடமாட்டன். எங்கடை கடலில வைச்சு, எங்கட அப்பாவைச் சுட்டு எந்தக் கடலோடை அப்பாவின்ரை இரத்தம் கலந்ததோ எப்பிடி நாங்கள்எங்கடைஅப்பாவின்ரை 'பொடி'யைக்கூட பாக்கேலாமல் போச்சுதோ அப்பிடியே அவங்களையும் நான்சக்கையாக்குவன் அவங்கட இரத்தமும் சதையும் எங்கடை கடலில கலந்துபோகும் அப்ப நீங்க அழக் கூடாது சந்தோஷப்படனும்''

மகனின் வார்த்தைகளைக் கேட்டதாய் அப்படியே அவனைக் கட்டி அணைத்துக் கொண்டு விம்மினாள் அவளது கண்கள் கண்ணீரைச் சொரிந்தாலும் முகத்தில் ஓர் புன்முறுவல் தோன்றிமறைந்தது.

---

# நிறைவான கிராமங்களில் நிலையற்ற வாழ்க்கை?

**சரா. புவனேஸ்வரன்**

தென் தமிழீழம் சிறிலங்காவின் பொருளாதார வளர்ச்சியில் பெரிதும் பங்கெடுத்துக்கொண்ட முக்கிய பிரதேசம். இங்கு காலங்காலமாக தமிழர்கள் வாழ்ந்து வந்தது வரலாற்று உண்மை. ஆனால் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை சிங்களவர் எப்பொழுது பெற்றார்களோ அன்றே தமிழரின் தாயகக் கனவுகளில் சிங்கள இனவெறி தாண்டவமாடத் தொடங்கியது. 1958 இல் இருந்து இன்று வரை படிப்படியாக தனது கோரக் கொடுமைகளைப் புரிந்துகொண்டே இருக்கிறது. செல்வச் செழிப்புள்ள நிலங்களில் சிங்கள மொழி புகுத்தப்படுகிறது. காரணப் பெயர்களாக தமிழர்களால் இடப்பட்ட கிராமங்களின் பெயர்கள் அக்காரணத்தன்மை அற்றுப் போகும் அளவுக்கு சிங்கள இனவெறி சின்னா பின்னமாக்குகிறது.

உலகிலேயே சிறந்த துறைமுகங்களில் ஒன்றான திருக்கோணமலைத்துறைமுகத்தை அண்டிய அத்தனை கிராமங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக தங்கள் தேவைகளைத் தாங்களே பரிமாறிக் கொள்ளும் அளவிற்கு செழித்திருந்தன.

அதாவது திருமலை நகரத்தில் இருந்து கிழக்கே 13மைல் தூரத்தில் கடலுக்கு அப்பால் இருக்கும் மூத்தூர் எனப்படுகின்ற பிரதேசத்தில் சுற்றியுள்ள கிராமங்களான கட்டைபறிச்சான், சம்பூர், கூர்நெல்தீவு, மல்லிகைத்தீவு, கிளிவெட்டி போன்ற அழகிய கிராமங்கள் இன்று அமைதியற்று பீதியுற்றுக் காணப்படுகின்றன.

சம்பூர் எனப்படுகின்ற போது அனைத்து வளங்களும் நிறைந்து காணப்படும் ஓர் கிராமம் என்பது பொருள். இக் கிராமத்தின் ஒரு கடல் முனையில் வெளிச்சவீடு ஒன்று உண்டு. அதன் குறியை அறிந்த பின்னரே கப்பல்கள் திருக்கோணமலைத் துறைமுகத்தினுள் நுழையும். இக் கிராமத்தைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் பல்வகையான மீனினங்கள் வருவதால் பருவங்களுக்கு ஏற்றாற்போல் விதம் விதமான மீனினங்கள் பிடிக்கப்படும். ஆழம் குறைந்த குடாவாகவும். மகாவலி கங்கையின் ''கழிமுகம்'' இங்கு அமைந்திருப்பதாலும் மீனினத்தின் வருகை மிக மிக அதிகமாக இருக்கும்.

அடுத்து நெற்செய்கை பண்ணப்படும் வளம் குன்றாத நெல் வயல்கள், நீர்ப்பாசனக் குளங்கள் இப்படியான செல்வச் செழிப்புள்ள கிராமத்து மக்கள் எவருக்கும் அஞ்சாது வாழ்ந்து வந்த தொரு காலம் அந்நிலை 1958 ற்கு முன்னர் தான் இன்று அக்கிராமங்களில் பல சிங்கள இராணுவ முகாம்களால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளன. அப்பகுதி மக்கள் தமது உணவை இராணுவ முகாம்களுக்குச் சென்று பெறவேண்டிய நிலை. வாரத்தில் ஒரு நாள் ஒரு குடும்பத்திற்கு குறித்த அளவு பொருட்கள் மட்டுமே பணத்திற்கு விநியோகிக்கப்படும். இது ''ஆனைப்பசிக்கு அறுகம் புல் போட்டதுபோல்''

அத்தோடு கல்விமான்கள் பலர் படிப்படியாக இராணுவத்தால் அரச அனுமதியோடு சுட்டுக் கொல்லப்படுவதும், பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதும் தமிழரின் விகிதாசாரத்தை மட்டுமல்ல. இனிமேல் உருவாகும் தமிழ் சந்ததியையும் அழிக்கும் இன வெறி அரசின் திட்டமிட்ட செயல்.

அரசியல்வாதிகளாலும், சிங்கள இனவாதிகளாலும் தேர்தல் காலங்களில் ஏமாற்றப்பட்ட அப்பகுதி மக்கள் தங்கள் ஏமாற்றங்களை உணர்ந்து விழிக்கத்தொடங்கிவிட்டார்கள். விடுதலைப் பாதையின் நிதர்சனத் தன்மையை உணர்ந்துவிட்டார்கள். மின்சாரமே இல்லாது கைவிளக்குகளால் தம் வாழ்வை பிரகாசமாக்கிக் கொண்டிருந்த மக்கள் தங்கள் உயிர், உடைமைகள் அனைத்தையும் இழந்து இன்று அகதிகளாகவும் அநாதைகளாகவும் ஆக்கப்பட்டுவிட்டனர். எத்தனையோ தமிழ். சிங்கள, முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மின்சாரம் தருவதாகக் கூறி அதன் கம்பங்களைக்காட்டி பலமுறை வாக்குப் பெற்றது மறக்க முடியாத மறையாத உண்மை. இன்று அப்பகுதிக்கு மின்சாரம் கிடைக்கப் போவதாக கூறப்படுகிறது. இதற்கிடையில் இராணுவ முகாம்களில் வாக்குச்சாவடிகளை அமைத்து மாகாணசபைத் தேர்தலை நடாத்த இனவெறி அரசு அப்பகுதி மக்களை துன்பப்படுத்தப் போகி

(6ஆம் பக்கம் பார்க்க)

# 3-ம் ஆண்டு நினைவலைகள்



**தாயின் மடியில்:**
**1974-05-09**

**தமிழீழ மண்ணில்:**
**1991-01-30**

## வீரவேங்கை கலீபன்

(கந்தசாமி யோகதாசன்)

திதி: *1994-01-28*

அன்பின் திருவுருவாய் ஆசைக்குரிய மகனாய்
பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
விடுதலையை நேசித்த வீரமகனே
உன் நினைவு எம் நெஞ்சைவிட்டு அகலா,

என்றும் உன் ஆத்மசாந்திக்காக
ஆண்டவனை வேண்டும்.

வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம்.

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

(7243)

## நிறைவான

றது இதன் உண்மை எஞ்சிக் கிடக்கும் பூமியையும் சிங்கள குடியேற்றத்தால்நிறைவாக்க சிங்கள அரசு திட்டமிடுகிறது. தாம் நன்மை செய்வதாகக் கூறி வெளி உலகையும், மக்களையும் ஏமாற்றப் பார்க்கிறது. மக்களின் முழு உணர்வும் "தமிழீழம்" என்ற தலைப்பை மையப்படுத்திய பிறகு இந்தப் போலியான வசதிகளும், தேர்தல்களும் எதுவுமே செய்யப் போவதில்லை.

கல்விக்கூடங்களும், மக்கள் வாழ்விடங்களும் சிங்கள இன வெறியர்களின் கொலை முகாம்களாக உள்ளன. தமிழர்களின் கலாசார மையங்கள், கலைப் பொக்கிசங்கள் பூண்டோடு அழிக்கப்படுகின்றன நாயன்மார் காலத்து பிரசித்தி பெற்ற திருக்கோணேச்சரம் இன்று இன வெறியர்களின் பாதணிகள் மட்டும் படுகின்ற இடமாக மாறிவிட்டது சில வேளை அங்குள்ள விக்கிரகங்கள் அகற்றப்பட்டு விகாரைகளாக மாறுகின்ற நிலைமையும் ஏற்படலாம்? காரணம் ஆலய நுழைவாயிலில் அமைந்துள்ள புத்தர் சிலை அதன் முதற்படி.

ஆனால் தமிழர்கள் தமக்குரியது "தமிழீழம்" என்ற வரைபை தரணி முழுவதும் எடுத்துக்காட்டி விட்டார்கள் தாயகப் பாதையை மாவீரர்களின் தியாகத்தின் மூலம் செப்பனிட்டு விட்டார்கள் அந்தப்படிகளில் குருதியும் மனவுறுதியும் படிந்திருக்கும் வரை எந்த இன வெறியராலும், ஏகாதிபத்தியவாதிகளாலும் தடுத்து நிறுத்த முடியாது. இறுதி இலட்சியம் ஈடேறும் வரை அவர்களது பயணம் தொடரும் என்பது அசைக்க முடியாத உண்மை.

## நன்றி நவிலல்

அமரர் ச. சொக்கலிங்கம், ஏழாலை மேற்கு அவர்களின் இறுதி நாட்களில் அருஞ்சேவை செய்த யாழ். போதனா வைத்தியசாலை 7-ம் வார்ட் வைத்திய நிபுணர்கள், டாக்டர்கள், தாதிமார்கள், நலன்புரிச் சங்கத்தினர், செஞ்சிலுவைச் சங்கத்தினர் மற்றும் இறுதிக் கிரியையின்போது நேரில் கலந்துகொண்டு மலரஞ்சலி செலுத்திய, இரங்கல் செய்திகள் வெளியிட்ட யாழ். இந்துக்கல்லூரி, யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயம், மல்லாகம் மகாவித்தியாலயம், ஏழாலை மகாவித்தியாலயம், கோட்டைக்காடு அ. த. க. பாடசாலை, ஏழாலை சைவ மஹாஜனா ஆகியவற்றைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள், ஏனைய சக உத்தியோகத்தர்கள், தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள் ஆகியோருக்கும் மீளாத்துயரில் ஆறுதல் கூறிய. அனுதாபச் செய்திகள் அனுப்பிய, எல்லா வழிகளிலும உதவிகள் புரிந்த நணபர்கள், உறவினர்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகள்.

தனித்தனியாக நன்றி தெரிவிக்க இயலாததையிட்டு மனம் வருந்துகிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(7343)

# JAFFNA COLLEGE
# INSTITUTE OF TECHNOLOGY
## *VADDUKODDAI*

முழுநேரப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

### 1. Technician Diploma Courses
(English Medium)

(i) **Civil Engineering & Quantity Surveying - 2 years**
Educational qualification:- G.C.E. (O-L) - minimum six subjects including maths-C; science-C; English-S

கல்வித் தகைமை:- G.C.E. (O/L)-குறைந்தபட்சம் 6பாடங்கள்; கணிதம்-C, விஞ்ஞானம்-C, ஆங்கிலம்-S உட்பட.

### 2. Diploma Courses

(i) **Draughtsmanship - Civil**

(ii) **Computer Programming & Data Processing**
(Basic, Cobol & d—Base III +)
Practicals on IBI - PC AT & MAT 386 Industrial Controller
Educational qualification:- **G.C.E. (O-L)** - minimum six subjects with credit for maths.

கல்வித் தகைமை:-G.C.E. (O/L) குறைந்த பட்சம் 6 பாடங்கள்; கணிதம் - C உட்பட

(iii) **Advanced Diploma in Computing.** (Syllabus includes British computer society & Australian computer society) - **1 year**
Educational qualification:- G.C.E. (O-L) - minimum six subjects with maths - C & English - S
G. C. E. (A-L) minimum one subject

### 3. Technician Certificate Courses

(i) **Air-Conditioning & Refrigeration - 1½ years**
(ii) **Radio & T. V. Servicing - 1 year**
(iii) **Automobile Technology - 1 year**
Educational qualification:- G. C. E (O-L) with Maths - S & Science - S

கல்வித் தகைமை:- G.C.E. (O-L) கணிதம் - S, விஞ்ஞானம் - S

### 4. Craft Certificate Courses (தமிழ் மொழி மூலம்)

(i) **Machine shop Practice - 1 year**
இயந்திரப் பட்டறைப் பயிற்சி - ஒரு வருடம்

(ii) **Electrical wiring & Installation Practice - 1 year**
மின்னிணைப்புப் பயிற்சி - ஒரு வருடம்

(iii) **Welding Practice - 1 year**
ஒட்டுனர் பயிற்சி - ஒரு வருடம்

கல்வித் தகைமை:- க. பொ. த. (சா. த) வரை படித்திருத்தல் வேண்டும்.

### விசேட கவனத்திற்கு

❋ இல. '4' தவிர்ந்த ஏனைய பயிற்சி நெறிகள் யாவும், மாணவர்கள் வெளிநாட்டுப் பரீட்சைகளை எதிர்கொள்ளத்தக்க வகையில் ஆங்கில மொழிமூலம், வேண்டிய தமிழ் விளக்கத்துடன் நடாத்தப் படும்; இதற்கு ஏற்ப பயிற்சிக்காலம் பூராவும் ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது.

❋ இதர வசதிகள்:
1. நூலகம்
2. விடுதி (ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியே)
3. விளையாட்டுத்துறை

❋ **விண்ணப்பப் படிவம்: ரூபா 30/-**

பெற்றுக்கொள்ளக்கூடிய இடம்:- "CLS" புத்தகசாலை, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்
"J.C.I.T." அலுவலகம் வட்டுக்கோட்டை.

விண்ணப்பப் படிவங்களை 14-02-94க்கு முன் வட்டுக்கோட்டையில் கிடைக்கக் கூடியதாக தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கவும்.

❋ போதியளவு மாணவர்கள் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரமே குறிப்பிட்ட பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும்.

**முக்கிய குறிப்பு:**

The "Open University of Sri Lanka" (OUSL) has granted exemptions for the Technician Diploma Courses.
தொழில்நுட்ப டிப்ளோமா பயிற்சி நெறிகளுக்கு, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் 'பாட விதான - விலக்கு' (exemption) அளிக்கப்பட்டுள்ளது.

(சி-8441)

# தமிழக ஆளுநர் - முதலமைச்சர் மோதல்; மத்திய அரசின் நிலைப்பாடு என்ன?

தமிழகத்தில் நடைபெற்ற இந்தியக் குடியரசு தின வைபவத்தின்போது தமிழ்நாடு ஆளுநர் சென்னாரெட்டி மீது தாக்குதல்நடாத்த ஜெயலலிதா திட்டமிட்டிருந்தார் எனவும் அதற்கான பொறுப்பை தனது அமைச்சர் ஒருவரிடம் முதலமைச்சர் ஜெயலலிதா ஒப்படைத்திருந்தார் எனவும் பாரதூரமான குற்றச்சாட்டு ஒன்றை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி ஜெயலலிதா மீது சுமத்தியிருந்தார். வழக்கமாக இவ்வாறான குற்றச்சாட்டுகளை விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்படுத்தி விடுவது தான் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் இயல்பு. ஆனால் இம்முறை ஜெயலலிதா இக்குற்றச்சாட்டுக்கு உள்ளானார்.

ஆனால் குடியரசுதின வைபவத்தில் ஆளுநர் சென்னாரெட்டியும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும் ஒருமித்துக் கலந்து கொண்டுள்ளமை ஆளுநருக்கும் ஜெயலலிதாவிற்கும் இடையில் மீண்டும் உறவு துளிர் விடுகிறதா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

அண்ணா தி. மு. க. - இந்திரா காங்கிரஸ் உறவு முறிவடைந்த பின்னர் ஜெயலலிதா ஆட்சிக்கும் காங்கிரசுக்கும் இடையே இடைவிடாத பனிப்போர் தொடர்ந்து கொண்டேயிருந்தது. முதலாவதாக ஆளுநர் பீஷ்ம நாராயண் சிங் பதவியிலிருந்து நீக்கப்பட்டு ஆந்திர அரசியல்வாதி சென்னாரெட்டி பதவிக்குக் கொண்டுவரப்பட்டமை ஜெயலலிதா ஆட்சிக்கு விடப்பட்ட எச்சரிக்கையாக கொள்ளப்பட்டது. இந்தநேரத்தில் மு. கருணாநிதியின் ஆட்சி கலைக்கப்பட்டபோது ஆளுநராக இருந்த பர்னாலா நீக்கப்பட்டு பீஷ்மநாராயண் சிங் ஆளுநராக்கப்பட்டமை கூட சுட்டிக்காட்டப்பட்டது- ஆனால் தமிழக அரசு உடனடியாக கலைக்கப்படவில்லை எனினும் தமிழக முதல்வருக்கும் சென்னாரெட்டிக்கும் இடையிலான மோதல் நாளுக்கு நாள் வலுத்துக் கொண்டே வந்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டின் முதலாவது சட்டசபைக் கூட்டத்தொடரின் ஆரம்பக் கூட்டத்தில் ஆளுநர் உரை இடம்பெறும் மரபு இம்முறை மீறப்பட்டுள்ளமை ஆளுநரை ஜெயலலிதா வெளிப்படையாக எதிர்க்கத் தொடங்கியமையைக் காட்டியது. இவ்வருடம் ஜனவரி 3-ம் திகதி இடம்பெற்ற சட்டசபைக் கூட்டத்தில் ஆளுநர் உரை இடம்பெறாமையைக் கண்டித்து காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளியேறினர்-

தனது உரையில்லாமல் சட்டசபைக் கூட்டமா? ஜீரணிக்க முடியவில்லை என்றாராம் ஆளுநர். 'பாவம் முதல்வர் புலிவாலைப் பிடித்து விட்டார்' என்று கூறிய ஆளுநர் தனது மாளிகையிலேயே ஒரு போட்டி சட்டசபை நடத்தக் கூட தயாராகி விட்டாராம். இதில் காங்கிரஸ் உறுப்பினர்களும் சில அ.தி மு க. உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள்எனவும் அங்கு ஆளுநர் உரை நடைபெறும் எனவும் சொல்லப்பட்டது. 'இதனால் பெரும் விபரீதம் ஏற்படும்' என முதல்வர் ஜெயலலிதா எச்சரித்திருந்தார்.

இதேவேளை தமிழ்நாட்டில் பல்கலைக்கழகங்களில் வேந்தர்பதவி முதல்வருக்கா? ஆளுநருக்கா? என்ற கேள்வி இம்முரண்பாட்டை பெரிதாக்கியது. இதுவரை காலமும் ஆளுநர் வகித்து வந்த வேந்தர் பதவியைப் பறித்துக் கொள்ள 'வேந்தர் பதவி முதல்வருக்கே' எனத் தமிழ்நாடு சட்டசபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த மசோதாவிற்கு ஆளுநர் ஒப்புதல் அளித்தபின்பே, அதுசெல்லுபடியாகும். எனினும் இந்த மசோதாவை ஆளுநர் ஏற்றுக்கொள்ள மறுத்தால் மந்திரி சபை கூடி மசோதாவை மறுபரிசீலனை செய்து மசோதா நிறைவேறிவிட்டதாக அறிவித்துவிட முடியும். இவ்வாறு நடந்துகொண்டால் ஆளுநர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜெயலலிதா ஆட்சியை நீக்கிவிட முடியும்.

இந்த மசோதாவை ஆளுநர் நிராகரித்தால் ''தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா காலவரையறையற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பார் தமிழகமே தலைபுரளும்'' என தமிழ்நாடு மூத்த அமைச்சர் ஒருவர் எச்சரித்தார்.

இதற்கிடையில் தமிழ்நாடு அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள டைரியின்முன் பக்கத்தில் ஆளுநர் படம் இடம்பெறவில்லை. இது வழமைக்கு மாறானதொன்றாகும். இது இடம்பெறவில்லை என்பதைவிட ஜெயலலிதாவால் நீக்கப்பட்டது என்பதே உண்மை.

புதுவருடத்திற்குமுதற்தினம் தமிழ்நாடு அரசாங்கம் வெளியிட்ட டைரியின் ஒருபிரதியை ஜெயலலிதாவிடம் கொண்டு. சென்றனர் அதிகாரிகள். சட்டமன்றஉறுப்பினர்கள், அமைச்சர்கள் உயர் அதிகாரிகள் என் போருக்கும் வழங்க வென இந்தடைரிகள் அச்சிடப்பட்டிருந்தன.

டைரியை விரித்ததும் முதல் பக்கத்தில்ஆளுநரின் படம் ஜெயலலிதாவிற்கு பெரும் ஆத்திரம் வந்தது உடன்நீக்கும்படி உத்தரவிட்டார். அரசு டைரியில் கவர்னரின் படம் போடுவதுசம்பிரதாயம்என்று அதிகாரிகள் கூறியும் உடனே அகற்றும்படி உத்தரவிட்டு விட்டார் ஜெயலலிதா இதனால் தமிழக ஆளுநர் பெரும் ஆத்திரமடைந்தார்.

மேலும் தஞ்சாவூரில் அ இ அ.தி மு கவிலிருந்து ஜெயலலிதாவால் நீக்கப்பட்ட முன்னாள்அமைச்சர்கள் எஸ். ஆர் ராதா அழகு, திருநாவுக்கரசு ஜி. விசுவநாதன் ஆகியோரின் ஏற்பாட்டின்பேரில்நடைபெறவிருந்த எம் ஜி. ஆர் பிறந்த தினவிழாவில் கலந்து கொள்ளத் திட்டமிட்டிருந்த தமிழக ஆளுநர் சென்னாரெட்டி இறுதிநேரத்தில் தனது திட்டத்தை கைவிட நேர்ந்தது.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் காரணம் எனக் கூறப்பட்டிருந்தபோதிலும்; இந்த விழாவிற்குப் போட்டியாக தஞ்சாவூரிலேயே அ.தி.மு.க அமைச்சர்கள் நால்வர் நடாத்தவிருந்தஎம் ஜி. ஆர்பிறந்த நாள் விழாவும் ஆளுநர் சென்னாரெட்டியை தஞ்சைக்கு வரும் வழியில் மறித்து அவருக்கு கறுப்புக்கொடி காட்ட அ தி.மு.கவினர் திட்டமிட்டிருந்தமையுமே ஆளுநர் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளாமைக்கு உண்மைக் காரணம் எனக்கூறப்படுகிறது;

இந்நிலையில் வாழப்பாடியின் 'தாக்குதல்' குறித்த எச்சரிக்கை, ஆளுநர் கலந்து கொள்ளும் குடியரசு தின வைபவத்திற்குப் போட்டியாக வேறொரு இடத்தில் ஜெயலலிதா நடாத்த திட்டமிட்ட தேசிய கொடியேற்றும் நிகழ்வு, என்பன இம்மோதலை உச்சக்கட்டத்திற்கு கொண்டுசென்றன.

இக்குடியரசுதின விழாவில் ஜெயலலிதா கலந்துகொள்ள மாட்டார் என்பதுடன் அணிவகுப்பு மரியாதையில் கலந்து கொள்ள தமிழக பொலிஸ் படைக்கு மறைமுகத் தடைவிதித்தார் எனவும் ஆளுநர் கொடியேற்றப் போகும் போது வழி மறிக்கப்படுவார் எனவும்கூட எதிர்பார்க்கப்பட்டது. இதனால் இவ்வாறு ஏதாவது நடைபெற்றால், ஆளுநர் வீட்டின் மாடியில் கொடியேற்றுவதற்கு கூட ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

முப்படைத் தளபதிகளும், கரையோரக் காவற்படைத் தலைவரும் ஆளுநருக்கு வரவேற்புத் தருவார்கள். அணிவகுப்புகள் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு என்பன இடம்பெறாத நிலையில் கடற்கரையில் ஆளுநர் கொடியேற்றுவார் என நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தன. ''அரசியலமைப்புச் சட்டப்படி எனக்குரிய கடமைகளையும், உரிமைகளையும் விட்டுக்கொடுக்க மாட்டேன்'' என ஆளுநர் சபதம் ஏற்றிருந்தார்.

இவ்வாறான ஒரு முறுகல் நிலையில்அண்மையில் காஞ்சிபுரத்திற்கு வந்திருந்த இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் ''அரசியலமைப்பையும் ஆளுநரையும் பாதுகாக்க மத்திய அரசு ஒருபோதும் தயங்காது'' எனத் தெரிவித்தமை ஆளுநர் எடுக்கும் எந்த நடவடிக்கையையும்மத்திய அரசு ஆதரிக்கும் என்பதை வெளிப்படுத்தியிருந்தது.

மேலும் ஆளுநர் சென்னாரெட்டிக்கும், அவரது செயலாளர் ஷீலாப் பிரியாவிற்கும் ஏதோ ஆபத்து எதிர்நோக்கியிருப்பதாக உளவுத்துறை அறிக்கைகிடைத்துள்ளது என பிரதமர் ராவ் எச்சரிக்கை செய்திருந்தாராம்

இத்தனைக்கும் மத்தியில் ஜெயலலிதா அரசைக் கலைக்க காங்கிரஸ் அரசு தயங்கியது ஏன்? என்ற கேள்வி எழுகிறது

தமிழ் நாட்டில் அ.தி.மு.க காங்கிரஸ் கூட்டணி முறிந்த பின்னர், புதியகூட்டொன்றை ஏற்படுத்திக் கொண்டால் ஒழிய தேர்தலில் வெற்றிபெற முடியாது என்பதைகாங்கிரஸ் தெரிந்து வைத்திருந்தது. இன்றும்கூட சட்டசபை கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடாத்தப்பட்டால் காங்கிரசுக்கு உள்ள வெற்றிவாய்ப்பு குறித்து மட்டுமல்ல உள்ளதையாவது பெறமுடியுமா? என்ற கேள்வி காங்கிரசார் மத்தியில் காணப்படுகிறது.

இந்நிலையில் இந்த இடைக்காலத்தில் ஜெயலலிதா ஆட்சியைப் பகைத்துக் கொள்ளாது அதேவேளை திராவிடக் கட்சியாகிய தி.மு.கவை பிளவுபடுத்தும் முயற்சியில் காங்கிரஸ் ஈடுபட்டது தி மு கவிற்குள் நிலவிவந்த உட்கட்சிப் பூசலைப் பயன்படுத்தி இப்பிளவை ஏற்படுத்துவதில் பெருமளவு வெற்றியையும் கண்டுள்ளது;

தி மு கவில் காணப்பட்ட குடும்ப ஆதிக்கத்தின் மத்தியிலும் தனக்கென ஒரு இடத்தை வளர்த்துக் கொண்டு வந்தவர் வை கோபால்சாமி கலைஞரின் போர்வாள் என அவராலேயே அழைக்கப்பட்டவர் ஆனால் தனது மகன் ஸ்டாலின் ''வருங்கால முதல்வர்'' என்ற கனவைச் சிதைக்க கோபால்சாமியால் முடியும் என உணர்ந்துகொண்ட பின் கோபால்சாமியின் வளர்ச்சியைத் தடுக்க கருணாநிதி முடிவு செய்தார் தி மு க ஆட்சி கவிழ்ந்ததற்கு வை-கோபால்சாமிதான் காரணம் எனவும் கோபால்சாமி புலிகளுடன் வைத்திருக்கும் தொடர்பு கட்சியையே தடாச்சட்டத்தின்கீழ் தடைசெய்யும்நிலைக்கு கொண்டுசெல்லும் எனக் கூறி கட்சியிலிருந்து அவரை நீக்கிவிட கருணாநிதி முயற்சித்தார் ஆனால் கருணாநிதியின் தனிச் செயலாளர் நாகராஜனின் வாக்குமூலம் தன்னையும் புலிகளுடன் தொடர்புபடுத்தியிருந்தமையால் அம்முயற்சியை கைவிட நேர்ந்தது பின்னர் வை கோவின் தம்பிரவிச்சந்திரன்காயமடைந்த புலிகளுக்கு மருத்துவ வசதி செய்து கொடுத்தார் எனக் கூறப்பட்டு 'தடா'சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டபோது கோபால்சாமியைக் கட்சியிலிருந்து நீக்க முயற்சித்தார். ஆனால் கட்சியில் கோபால்சாமிக்கு இருந்த செல்வாக்கு கருணாநிதியின் எண்ணம் செயலாகப் பெரும் தடையாக இருந்தது

இந்நிலையில் அ. தி. மு க. - காங்கிரஸ் கூட்டணி முறிவானது தி. மு. க - காங்கிரஸ் கூட்டுக்கு வழிவகுக்கலாம் என்ற நிலையில் இக்கூட்டு ஏற்படுவதற்குத் தடையாக இருப்பதனை நீக்கும் முயற்சியில் கருணாநிதி ஈடுபட்டார்.

ராஜீவ் கொலை விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாகக் குற்றம் சாட்டப்படும் விடுதலைப் புலிகளுடன் உறவை வைத்திருக்கும் வை. கோபால்சாமி தி. மு. கவில் இருக்கும்வரை தி. மு. க — காங்கிரஸ் உறவு சாத்தியமில்லை எனக் காங்கிரஸ் கட்சியினால் கோடி காட்டப்பட்டபோதுஒரே கல்லில்இரண்டு மாங்காய் அடிக்கக் கருணாநிதி தீர்மானித்தார்.

இங்கே ''கருணாநிதியைக் கொல்வதன் மூலம் கோபால்சாமியை தி. மு. க. தலைவராக்க புலிகள் திட்டமிடுகின்றனர்'' என்ற இந்திய புலனாய்வுத் துறையினரின் அறிக்கையை வைத்துக் கொண்டு கருணாநிதி வை. கோ வை வெளியேற்றியமையானது காங்கிரசின் எண்ணத்தை நிறைவேற்றியுள்ளதென்றே கூற வேண்டும். ஏனெனில் தி. மு. க. பிளவடைந்த பின்னர் கருணாநிதி 'கொலைச்சதி' பற்றித் தகவல் கொடுத்தஇந்திய புலனாய்வுத் துறையினர் இந்த கொலைச்சதி குறித்து அலட்டிக் கொள்ளவில்லை. அவ்வாறாயின் இந்த 'கொலைச்சதி' தகவல் வை. கோ. வை வெளியேற்ற கருணாநிதி - காங்கிரஸ்மேற்கொண்ட கூட்டு முயற்சியே என்பதை உறுதிசெய்தது.

இதேவேளை தி. மு. கவிலிருந்து கோபால்சாமி வெளியேற்றப்பட்ட பின்னர், தி. மு கவுடன் கூட்டுவைப்பது குறித்து காங்கிரஸ் முயற்சி எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது எனவே 'காங்கிரஸ்- தி மு க கூட்டு, என்ற காங்கிரசின் ஆசைகாட்டலானது தி மு கவைப் பிளவுபடுத்த காங்கிரஸ் செய்த சதி நடவடிக்கை என்றே கொள்ளவேண்டும்

திராவிடர் பாரம்பரியத்தில் வந்துள்ளதாக அ. தி. மு, க, தன்னைக் கூறிக் கொள்கின்றபோதிலும் அது ஒரு திராவிடக்கட்சி என்பதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில், காங்கிரசின் இச்சதியானது திராவிடக் கட்சிகளை தமிழ் நாட்டிலிருந்து ஒழித்துக்கட்டும் ஒரு முயற்சி எனலாம்,

இந் நிலையில் ஆளுநருடன் - அ. தி. மு. க வினர் கொண்டுள்ள முரண்களுக்கு மத்தியிலும் அ. தி. மு க அரசை கலைத்துவிட காங்கிரஸ் தயாராகவில்லை என்பதுடன் மீண்டும் அ. தி மு. கவுடன் கூட்டுவைத்து கொள்ள காங்கிரஸ் முயற்சிப்பதாகவே தெரிகிறது இந்த உறவு ஆளுநர் - முதல்வர் குடியரசு தின விழாவில் ஒன்றாக கலந்து கொண்டமை வெளிக்காட்டுகின்றதா? என்பதே இன்றைய கேள்வி.


## ஸ்ரீபரமேஸ்வரன் ஆலயம்
### யாழ், பல்கலைக் கழகம்

மேற்படி ஆலயத்திற்கு 19' உயரமான மஞ்சம் ஒன்றைச் செய்து ஆறுமாத காலத்தினுள் வழங்குவதற்குத் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ளோர் 1994-02-05 பி. ப. 4-00 மணிக்கு முன்னதாகக் கேள்விகளை செயலாளர், மஞ்சத் திருப்பணிச் சபை, ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ சேர்ப்பிக்க வேண்டும்;

மேலதிக விபரங்கள், வரைபடங்கள் என்பவற்றிற்கு மேற்படி சபைச் செயலாளர் (திரு. சி ம. ஆலாலசுந்தரம்), நிதிக்கிளை, யாழ்: பல்கலைக்கழகம் அவர்களூடாகத் தொடர்பு கொள்ளவும்.

மஞ்சத் திருப்பணிச் சபை
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1994-01-26

(சி-8470)

# சலரோகம் நோய் பற்றிய ஓர் அறிமுகம்

டாக்டர் க. சிவபாலன்

நண்பரொருவர் தமக்கு ஏற்பட்டநோய்க்குப்பரிகாரம் தேடி வைத்தியசாலைக்குச் சென்றார். அவருக்குச் சிகிச்சையளித்த வைத்தியர் சலத்தைச் சோதித்து அதன் பெறுபேறுகளை அடுத்த முறை கொண்டுவருமாறு கூறியனுப்பினார். தனது மகனது சலத்தை பரிசோதனைக்குக் கொடுத்துத் தனக்குச் சலரோகம் இல்லை என நிரூபித்துவிட்டார் நண்பர்.

பொதுவாக வைத்தியர்கள் சலரோகம் இருப்பதை ஆரம்பத்திலேயேஅறிந்துவிடவேண்டும், அதன் விளைவுகளைத் தவிர்க்கவேண்டும் என்று கருதுவார்கள். ஆனால் சலரோகம் இருப்பதாக வைத்தியர் கூறிவிட்டால், வாழ்வில் உள்ள சுதந்திரம் பறிபோய்விடும்; விரும்பியவாறு உண்ணமுடியாது; மற்றவர் சுவைத்து உண்பதைப் பரிதாபமாகப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்; இப்படிக் கட்டுப்பட்டு வாழ்வதை விட இவற்றை எல்லாம் அனுபவித்துவிட்டுப் போய்ச் சேர்வதே மேல் என்று கருதும் நோயாளிகளும் உள்ளனர்.

சலரோகம் என்பது ஆயுள் தண்டனை என்ற நிலை இப்போது மாறிவருகின்றது. சுகதேகி ஒருவரின் வாழ்க்கைக்கும் சலரோகி ஒருவரின் வாழ்க்கைக்கும் அதிக வித்தியாசம் இல்லை என்பதையும், சலரோகம் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ளும் முறைகளையும், சலரோகம் இருப்பின் அதை உரிய முறையில் பரிசோதித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் தன்மை பற்றியும் மக்கள் அறிந்திருத்தல் அவசியம்.

எமது உணவின் பெரும் பகுதி காபோவைதரேற்றுக்களாக அமைந்துள்ளது. அரிசி, கோதுமை, குரக்கன், கிழங்குவகை, சீனி, சர்க்கரை, பனங்கட்டி, பழங்கள் அனைத்திலும் காபோவைதரேற்றுக்களே அதிகம் காணப்படுகின்றன. இதில் சீனி போன்ற இனிப்புப் பண்டங்கள் அதிக சமிபாடு தேவையற்றனவாகவும், சிறுகுடலில் விரைவாக உறிஞ்சப்படக் கூடியனவாகவும் உள்ளன. மற்றைய உணவு வகைகளில் குளுக்கோசு எனும் காபோவைதரேற்று 'மாப்பொருள்' எனும் சிக்கலான உருவில் காணப்படுவதால் அவை சிறுகுடலில் சமிபாடடைந்த பின்னரே அகத்துறிஞ்சப்படுகின்றன.

சமிபாடடைந்த குளுக்கோசுடன் மற்றைய போசணைப் பொருள்களும் அகத்துறிஞ்சப்பட்டுக் குருதியை அடைகின்றன. குருதி உடலின் உறுப்புக்களூடு பாயும்போது உறுப்புக்கள் தமக்குத் தேவையான போசணைப் பொருள்களைப் பெற்றுக் கொள்கின்றன. உணவின் பெரும் பகுதியான குளுக்கோசு உறிஞ்சப்படும்போது குருதியில் குளுக்கோசின் செறிவு மிக அதிகமாவதும் பின் உபயோகப்படும் போது இல்லாது போவதும் விரும்பத்தக்கதல்ல. குறிப்பாக மூளையின் இயக்கத்துக்கு தொடர்ச்சியாகக் குளுக்கோசு குருதியிலிருந்து கிடைக்கவேண்டும். எக்காரணம் கொண்டும் குருதியில் குளுக்கோசின் செறிவு 100 மில்லி லீற்றருக்கு 60மில்லிக்கிராம் என்ற அளவிலும் குறைந்தால் மயக்க நிலை ஏற்படலாம். மேலும் குறைந்தால் மரணம் கூட ஏற்படலாம். எனவே தொடர்ச்சியாகக் குருதியில் குளுக்கோசு இருப்பதை உறுதிப்படுத்தவும் பல்வேறு உறுப்புக்கள் தமக்கு வேண்டிய குளுக்கோசைப் பெற்றுக்கொள்ள உதவுவதற்கும், வேலை அதிகரிக்கும்போது தேவைப்படும் மேலதிக குளுக்கோசை வழங்கவும் ஈரலும் தசைகளும் பெருமளவு குளுக்கோசை எடுத்துக் கிளைக்கோசனாகத் தொகுத்து சேமித்துவைக்கின்றன. உணவு உண்டதும் சேமிப்பு அளவு கூடுவதும் பின்னர் உபயோகத்துக்காக விநியோகிக்கப் படுவதுமாக கிளைக்கோசனின் அளவு கூடிக்குறைகிறது.

இவ்வாறு குருதியில் குளுக்கோசு சீரான செறிவில் காணப்படுவதற்கும் உறுப்புக்கள் குளுக்கோசு உபயோகிப்பதைக் கட்டுப்படுத்தவும்,சேமிப்பு அளவைக் கட்டுப்படுத்தவும் பல ஓமோன்கள் சுரக்கப்படுகின்றன. இதில்சதையியிலிருந்து சுரக்கப்படும் இன்சுலின் முதன்மையானது. உணவுண்டதும் குருதியில் குளுக்கோசின் அளவு கூடியதும் இன்சுலின் சுரப்பதும்அதிகரிக்கும், இதுகிளைக்கோசன் சேமிப்பை அதிகரிப்பதோடு பல்வேறு இழையங்களும் குளுக்கோசைப் பெற்றுக்கொள்ள உதவுகின்றது. அதிக குளுக்கோசு இருந்தால் ஒருபகுதி குளுக்கோசு கொழுப்பாக மாற்றப்பட்டு கொழுப்புச் சேமிப்புடன் சேர்க்கப்படும். பின்னர்குருதியில் குளுக்கோசு அளவு குறைவடைய இன்சுலின் சுரப்பதும் குறைவடையும்; கிளைக்கோசன் குளுக்கோசாகப் பிரிக்கப்பட்டுக் குருதியை அடையும்.

இதுதவிர, கோட்டிசோல் அதிரினலீன், குளுக்கோன் போன்ற வேறு ஓமோன்களும் குருதியில் குளுக்கோசின் அளவைப் பாதிக்கின்றன. இவை பொதுவாக இன்சுலினுக்கு எதிரான தொழிற்பாட்டைக் கொண்டுள்ளன. குருதியில் குளுக்கோசின் அளவு குறையும் போதும்உடலின் குளுக்கோசுப் பயன்பாடு அதிகரிக்கும்போதும் இவை கிளைக்கோசனை குளுக்கோசாக மாற்றி குருதியில் அதன் செறிவை அதிகரிக்கச் செய்கின்றன. மேலும் புரதம் போன்ற வேறு பொருள்களிலிருந்து புதிய குளுக்கோசு உருவாக்குவதையும் தூண்டுகின்றன.

கோட்டிசோல், அதிரினலீன் எனும் ஓமோன்கள் அதிரினல் சுரப்பியினால் சுரக்கப்படுகின்றன. பசிவேளையிலும், உடல், உள நெருக்குகள் ஏற்படும் வேளைகளிலும் இவை அதிகம் சுரக்கப்படுகின்றன. இவ்வேளைகளில் குருதியில் குளுக்கோசின் அளவை அதிகரிக்கின்றன.

இவ்வாறு உடலின் சமநிலையைப் பேணும் பொறிமுறைகள் இருப்பதால் நாம் அச்சமின்றி எதையும் எந்நேரத்திலும் விரும்பிய அளவு உண்ணலாம் எனக் கருதக்கூடாது. இன்சுலினைச் சுரக்கும் சதையம் எளிதில் நோய்வாய்ப்படக்கூடியது. இவ்வாறு இன்சுலின் செயற்பாடு பாதிக்கப்படுவதனாலேயே சலரோகம் ஏற்படுகின்றது

இன்சுலின் சுரப்பது குறைந்துவிட்டால் இழையங்கள் குருதியிலிருந்து குளுக்கோசைப் பெற்றுக் கொள்ள முடியாது போய்விடும். கிளைக்கோசன் உருவாக்கமும் பாதிக்கப்படும் கோட்டிசோல் போன்ற ஓமோன்களின் தொழிற்பாடு இன்சுலினினால் சமப்படுத்தப்படாததாலும் மேற்கூறிய விளைவுகள் ஏற்படுகின்றன. இதன் விளைவு குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரிப்பதும உடலின் இழையங்கள் குளுக்கோசு பெறமுடியாமல் வாடுவதுமாகும். இதுவே சலரோகத்தின் அடிப்படையாகும்.

சாதாரணமாகக் குருதியிலுள்ள குளுக்கோசு சிறுநீரகத்தினூடு வெளியேறமாட்டாது. ஆனால் குருதியில் அதன் அளவு அதிகரித்ததும் சிறுநீரகத்தின் செயற்பாட்டை மீறிக் குளுக்கோசு சலத்துடன் வெளியேறுகின்றது. இதனாலே தான் சிறுநீரில் குளுக்கோசு காணப்படுவதும் அதிக சிறுநீர் கழிப்பதும் சலரோகத்தின் முக்கிய அறிகுறிகளாகின்றன. ஆயினும் சிலவேளைகளில் வேறு காரணங்களாலும் சிறுநீரில் குளுக்கோசு காணப்படலாம் என்பதால் குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரிப்பது உறுதிப்படுத்தப்படுவதே சலரோகம் ஏற்பட்டதற்குரிய முடிவான அத்தாட்சியாகும். அதாவது இரத்தப் பரிசோதனை செய்த பின்பே ஒருவருக்கு சலரோகம் இருப்பதை உறுதிப்படுத்தலாம்.

சலரோகம் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. சிலருக்குச் சிறுவயதிலேயே சலரோகம் ஏற்பட்டு விடுகின்றது. இவர்களுக்கு தாய் தந்தையரிடம் இருந்து வரும் பரம்பரை இயல்பு ஒரு முக்கிய காரணமாகும். அத்துடன்ஒரு வகை வைரசுக்கள் சதையியைப் பாதிப்பதாகச் சில ஆராய்ச்சியாளரும், உடலின் இயல்பான நோய் எதிர்ப்புச் சக்தி திசை மாறிச் சதையத்தைத் தாக்குவதாக வேறு சிலரும் கருதுகின்றனர்

இவ்வாறு சிறுவயதில் சலரோகம் ஏற்படுபவர் மிகச் சிலரே. இவர்களின் சதையம் மோசமாகப் பாதிக்கப்பட்டு விடுவதால் இவர்களுக்கு இன்சுலின் ஊசி மூலம் செலுத்துவது அவசியமாகும்.

அதிகமானவர்கள் கிட்டத்தட்ட 40 வயது அல்லது அதற்கு மேல்தான் சலரோகத்தினால் பீடிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு பரம்பரை இயல்புடன் உணவு முறைகளும் சூழற் காரணிகளும் இணைந்தே இந்நோயை ஏற்படுத்துகின்றன. பரம்பரை இயல்பு அதாவது, தாய் தந்தையர்க்கோ அல்லது மூதாதையர்க்கோ சலரோகம் ஏற்பட்டிருந்தால் அவர்களது சதையி எளிதில்பாதிப்படையக் கூடிய தன்மையுடையதாக இருக்கும். கட்டாயம் பாதிக்கப்படும் என்பதில்லை. இவர்கள் தவறான வாழ்க்கை முறையினாலும், உணவுகளாலும் உடலின் கொழுப்புத்தன்மை அதிகரித்து, எடை கூடியவராக இருந்தால் அது பலவீனமான சதையியை எளிதில் பாதித்து சலரோகம் ஏற்படுகின்றது. அத்துடன் உடல், உள நெருக்கீடுகள் அதிரினல் சுரப்பியைத் தூண்டுவதால் அதன் ஓமோன்களின் செயற்பாடு அதிகரிக்க அதற்கு ஈடு கொடுக்க முடியாமலும் சதையி பழுதடையலாம். மேலும் பாரதூரமான வேறு நோய்கள், கர்ப்பம் போன்ற அசாதாரண உடல் நிலைகளும் சலரோகத்தை ஏற்படுத்தலாம்.

உணவுப் பழக்க வழக்கங்கள் பற்றியும், அதனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் சற்று விரிவாக ஆராயலாம். தவிட்டுடன் கூடிய அரிசி, கோதுமை (ஆட்டாமா), குரக்கன் போன்ற தானியங்கள் உணவாகும்போது இவை வயிற்றை நன்கு நிரப்புகின்றன- உண்மையில் இரைப்பை இத்தகைய உணவுகளுக்கே இசைவாக்கம் பெற்றுள்ளது: சீனி, கொழுப்பு அதிகமுள்ள பண்டங்கள் உண்ணும்போது அதிக அளவு சக்தி இரைப்பையினுள் அடக்கமுடிவதால் உடலின் தேவைக்கு அதிகமான சத்துக்கள் உள்ளெடுக்கப்படுகின்றன: மேலும் முதலில் கூறிய அரிசி, குரக்கன் போன்றவை சிறிது சிறிதாகச் சிறுகுடலினுள் செலுத்தப்பட்டு அங்கு சீரணிக்கப்பட்டு, சிறிது சிறிதாக அகத்துறிஞ்சப்படுகின்றன. நீண்டநேரம் இவ்வகத்துறிஞ்சல் நடைபெறுகின்றது இது சதையியை அதிகம் பாதிக்காமல் சிறிதளவு இன்சுலினை நீண்ட நேரம் சுரக்கச் செய்கின்றது. இதனால் உடல் முழுவதுமே நன்மையடைகின்றது.

அதிக அளவில் சீனி உணவில் சேர்க்கப்படும்போது அது விரைவிலேயே அகத்துறிஞ்சப்பட்டு விடும். இது குருதியில் குளுக்கோசின் செறிவை மிக மிக அதிகமாக்கும். இது சதையியை பலமாகத் தூண்டிப் பெருமளவு இன்சுலினை குறுகிய நேரத்தில் சுரக்கச் செய்கின்றது. குருதியிலிருந்து குளுக்கோசு விரைந்து அகற்றப்படுகின்றது. இதனால் கிளைக்கோசன் சேமிப்புக்குச் செல்லும் குளுக்கோசின் அளவை விட கொழுப்பாக மாற்றப்பட்டு சேமிக்கப்படும் குளுக்கோசின் அளவு அதிகரிக்கும். இங்கு பல வகை பாதிப்புக்களை அவதானிக்கலாம். சதையம் கடுமையான தூண்டுதலுக்குள்ளாவதால் இவ்வாறு தொடர்ந்து நடைபெற்றால் நோய்வாய்ப்பட்டு விடும். குறுகியநேரம் மட்டும் அதிக இன்சுலின் சுரக்கப்பட்டாலும் மிகுதி நேரத்தில் இன்சுலின் சுரப்புக் குறைந்து விடுவது உறுப்புக்களைப் பாதிக்கும்- மேலும் உடலின் கொழுப்புத் தன்மை அதிகரிக்கின்றது. அதிக காபோவைதரேற்று (குளுக்கோசு) உண்டாலென்ன, அதிக கொழுப்புணவு உண்டாலென்ன மேலதிகமானவை கொழுப்பாகவே சேமிக்கப்பட்டு கொழுப்புத் தன்மையை அதிகரிக்கும். இதனால் சலரோகம் மட்டுமல்ல உயர் குருதிஅமுக்கம் போன்ற வேறு பல வியாதிகளும் ஏற்பட ஏதுவாகின்றது

எமக்கு அதிகம் கிடைக்கும் தவிடு முற்றாக நீக்கப்பட்ட கோதுமை மாவும், கிழங்கு வகைகளும் எளிதில் சமிபாடடைபவை: ஆனாலும் சீனி போன்று பாதிப்புக்களை ஏற்படுத்துவதில்லை- மேலும் உணவுடன் அதிக தவிட்டுச் சத்து (உறிஞ்சப்படாத நார்ப்பொருள்கள்) அதிகம் உள்ள இலைக்கறி வகைகள், வாழைப்பொத்தி போன்றவற்றை அதிகம் உணவுடன் உட்கொள்வதால் எமக்குத் தேவையான உயிர்ச்சத்துகள், கனியுப்புக்கள் போதியளவு கிடைப்பதுடன் மலச்சிக்கல் போன்ற பல நோய்களும் தவிர்க்கப்படுகின்றன. மேலும் வயிற்றை நிரப்பும் தன்மை உள்ளதால் தேவைக்கு அதிகமாக உண்பதும் தவிர்க்கப்படுகின்றது- அத்துடன் தினசரி உடலுக்குத் தேவையான புரதச் சத்து இறைச்சியாகவோ, மீனாகவோ அல்லது பருப்பு வகைகளாகவோ சேர்க்கப்படும்போது உணவு முழுமை பெறுகின்றது.

இங்கு சீனியின் உபயோகத்தை விரிவாக நோக்க வேண்டும். தின்சரி உணவில் அதிக சீனி உண்பது தீங்கு விளைவிக்கும் என்பது சுட்டிக் காட்டப்பட்டது. எப்போதாவது ஒருநாள் இது நடைபெற்றால் அதிகம் பாதிப்பு இராது. ஆனால் அதிகவேலை செய்து களைப்படைந்த வேளையிலும், நோய்வாய்ப்பட்டு உணவு உண்ண முடியாத நிலையிலும் விரைந்து சக்தி வழங்கும் மருந்தாக சீனி அவசியமாகின்றது- அதாவது, மருந்து வகைகள் எவ்வாறு அவசியமானபோது உயிர் காப்பனவாகவும் அதிகமாக

(2ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது அகவை காணும்



செல்வன்

**ஜெயக்குமார் தவச்செல்வன்**

**28.01.1994**

இவரை
அன்பிலே வளர்ந்து பண்பிலே வாழ்ந்து
உண்மை பேசி உத்தமனாக
பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம்
குன்றாத வளமும் குறையாத செல்வமும் பெற்று
வாழ்கவென வீரகத்தி விநாயகர்
அருளை வேண்டி நிற்கும்.

அன்பான அப்பா, அம்மா (ஜெயக்குமார் - சத்தியபாலதேவி), அன்புத்தங்கை மதிவதனி, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், அத்தைமார், சித்தப்பா குமணகுமார் (பிரான்ஸ்), சரஸ் அத்தை, தாத்தா, மாமா செந்தாமரைச்செல்வன், தாத்தா தியாகராஜன் (சுவிற்சர்லாந்து), மாமா சிவலிங்கம் (சுவிற்சர்லாந்து) பூட்டி, பெரியப்பா குணரெத்தினம் குடும்பம் உற்றார், உறவினர்.

தகவல்:
(7335) க. ஜெயக்குமார்

# பேரினவாதத்தின் கூட்டுச் சதியில் சிக்கிப் போயுள்ள தொண்டமான்

நீண்டகாலத் தொழிற்சங்கவாதியும், அரசியல்வாதியுமான, அமைச்சர் தொண்டமான் தனது இராஜதந்திரம் பற்றியும், பேரம் பேசும் ஆற்றல் பற்றியும் எப்பொழுதும் பெருமையாக எண்ணிக் கொள்பவர், பேசிக் கொள்பவரும் கூட. தனது நீண்டகால அரசியல் அனுபவம் வெற்றிக்குக் காரணம் எனத் தெரிவிப்பவர்.

ஆயினும், அண்மையில் அவரின் இராஜதந்திரஅணுகுமுறைகளும், பேரம் பேசுதலும் பெரும் தோல்விகளையும், பின்னடைவுகளையும் அவருக்கும் அவரது கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்கும் ஏற்படுத்தியுள்ளது. இதனை அவரோ, அன்றி எவருமே மறுக்க முடியாது. அரசியலைப் பொறுத்து இன்றும் ஓரளவு பேரம் பேசும் வலு அமைச்சர் தொண்டமானிடம் இருக்கின்றதாயினும், அவரின் அண்மைக்கால இராஜதந்திர அணுகுமுறையும், பேரம் பேசுதலும் அவரது அரசியல் வாழ்க்கையில் கணிசமான நெருக்கடியை உருவாக்கியுள்ளது என்பதில் சந்தேகமில்லை.

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதிகளுடன் இருந்த நல்லுறவை தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுடன் தொண்டமானுக்கு தொடர முடியாமல் போனமைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். டி. பி. விஜேதுங்கா மலையகத்தில் தொண்டமானுக்கு எதிராக ஒரு பௌத்த - சிங்கள அணியை உருவாக்க முற்பட்டமை இதற்குப் பிரதான காரணியாகக் கொள்ளப்படுவதில் தப்பில்லை.

இந் நிலையில், அமைச்சர் தொண்டமான் டி.பி. விஜேதுங்காவுடன் இணைந்து செயற்பட முடியாது என்ற நிலையில் ஐ. தே. கவுடன் உறவை முறித்துக் கொண்டு வெளியேறி இருக்க வேண்டியதோடு, தனது பலத்தைத் தனித்துவமாக நிரூபிக்கக் கூடியவிதத்தில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்க வேண்டும். இது அவருக்குப் பலம் சேர்க்கக் கூடியதாக இருந்திருக்கும்.

ஆனால், அமைச்சர் தொண்டமான் கடந்த இருபது வருடகாலத்திற்குள் பேரம் பேசுதலிலும், இரண்டாவது சக்தியாக செயற்பட்டு பழகிப்போன நிலையில் அவரால் தனித்து நின்று ஐ. தே. கவை எதிர்க்கும் துணிவு பிறக்கவில்லை. அத்தோடு, இதனை ஐ.தே. கவுடன் ஒரு பேரம்பேசும் யுத்தியாகவுமே அவர் கடைப்பிடிக்க முற்பட்டார். இதன் அடிப்படையில் ஐ.தே. கவிற்கு எதிராக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசாநாயக்காவுடன் பேரம் பேசுதலில் ஈடுபட்டார். இதுவே தொண்டமான்விட்ட பெரும் இராஜ தந்திரத் தவறாக அமைந்தது.

ஐக்கிய ஜனநாயக தேசிய முன்னணியின் முன்னாள் தலைவர் லலித் கொல்லப்பட்டதில் இருந்து அதன் தலைமைப் பொறுப்பை ஏற்ற காமினி திசாநாயக்கா ஐ. தே. கவுடன் இணைவதற்கான பேரம் பேசுதலில் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தார். தற்பொழுது வெளியாகும் தகவல்களின் அடிப்படையில் நிதி அமைச்சர் பதவி காமினியின் குறியாக இருந்தது.

இந்நிலையில் காமினி திசாநாயக்காமீது அமைச்சர் தொண்டமான் எதன் அடிப்படையில் நம்பிக்கைவைத்து அரசியற் பேரத்தில் ஈடுபட்டார் என்பது இன்றும்கேள்விக்குரியதாகவே அரசியல் வட்டாரங்களில் உள்ளது.

அமைச்சர் தொண்டமானுக்கும் இந்தியாவிற்கும்இடையிலான 'நெருக்கமானஉறவு' உலகப் பிரசித்தமானவைஇந்நிலையில் காமினி திசாநாயக்காவுடனான தொண்டமானின் உறவானது இந்தியாவின் ஆலோசனையின் பேரில் அதாவது இந்தியப் புலனாய்வுத்துறையின் விருப்பின் பேரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்றே ஆரம்பத்தில் இருந்துஇராஜ தந்திர அரசியல் வட்டாரங்களில் கணிப்பிடப்பட்டது.

ஏனெனில் காமினி திசாநாயக்கா ஓர் இந்திய ஆதரவாளர். பல எதிர்ப்பிற்கும் மத்தியிலும் 1987 இந்திய- சிறிலங்கா சமாதான உடன்பாட்டை ஆதரித்தவர். இந்திய இராணுவத்தை அழைத்தமையை வரவேற்றவர். இன்றும் இந்திய இராணுவத்தை வெளியேற்றியமை தவறு என்ற கருத்தைக் கொண்டவர். இந்நிலையில் காமினி திசாநாயக்காவைஇந்தியா ஆதரிப்பதுஎனமுடிவுசெய்வது ஒன்றும் ஆச்சரியமளிக்கும் விடயம் இல்லை.

இதேவேளை, அமைச்சர் தொண்டமான் காமினி திசாநாயக்காவுடன் நீண்டகாலப் பகையுணர்வு கொண்டவர். 1977 ஆம் ஆண்டு நுவரேலிய மஸ்கெலியத் தொகுதியில் இருவரும் ஒரே தொகுதியில் எதிர்த்துப் போட்டியிட்டவர்கள். மூன்றுஅங்கத்தவர்கொண்டஇத்தொகுதியில் முதலாவதுஉறுப்பினராககாமினியும் மூன்றாவது உறுப்பினராக தொண்டமானும் தெரிவானவர்கள். இரண்டாவதுஉறுப்பினராக அநுரா பண்டாரநாயக்க சிறிலங்கா சுதந்திர கட்சியில் தெரிவானார்.

இவர்களின் இம் மோதல் அமைச்சரவைவரையிலும்நீண்டது. இருவரும்அடிக்கடிவெளிப்படையாகவே முரண்பட்டுக் கொண்டனர். இதன் உச்ச வெளிப்பாடாகவே அமைச்சர் தொண்டமானை''ஒரு நாயுண்ணி' என காமினி தெரிவிக்கும் அளவிற்கும்சென்றது. மேலும் இம் முரண்பாட்டின் விளைவானது 1977 இனக்கலவரத்தின் போது மஸ்கெலியா நுவரேலியப் பகுதியில் காமினியின்தலைமையில் தமிழருக்கு எதிரான வன்முறையில் ஈடுபடும் அளவிற்கு வழிவகுத்தது.

இம் முரண்பாடானது அரசியலுக்கும் அப்பால் தொழிற்சங்க நடவடிக்கைவரை சென்றது. தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்கு எதிராக ஐ. தே. கட்சியின் ஒருபெரும்தொழிற்சங்கத்தை காமினி திசாநாயக்கா கட்டி வளர்க்கமுற்பட்டார். காமினி இதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் கண்டார். இது தொண்டமானின் தொழிற்சங்க நடவடிக்கைக்கு எதிராகச் சவால்விடும் அளவிற்கு தொழிற்சங்க ரீதியாக காமினியை வளர்த்தது. பின்னர் இத்தொழிற்சங்க உறுப்பினர் காமினியின் அரசியலில் பின்புலமாகவும்அமைந்தனர்.

ஆனால்இப்பகை ஐ.தே.கவில் இருந்து காமினிதிசாநாயக்கா வெளியேறிய பின்னரும் நீடித்தது. அவர்தொண்டமானைக் குறிப்பாகத் தாக்கியே வந்தார். ஜனாதிபதி பிரேமதாசா தன்னை ஓரம் கட்டுவதற்காக தொண்டமானை வளர்ப்பதாக கருதிய காமினிதிசாநாயக்கா பிரேமதாசா அளவில் தொண்டமானின் மீதும் ஆத்திரம் கொண்டிருந்தார்.

வரலாறு இவ்வாறு இருக்க முன்பின் எதுவித அறிவிப்பும், இணக்கப்பாடும் இன்றி அமைச்சர் தொண்டமான் காமினி திசாநாயக்காவிற்கு ஆதரவாக மத்திய மாகாண சபையில் செயற்படப் போவதாக அறிவித்தமையானது அரசியல் அவதானிகள் மட்டத்தில் ஆச்சரியத்தையே ஏற்படுத்தியது. அதிலும் அமைச்சர் தொண்டமான் இ தொ.காவின்அனுமதியைப்பெறாமலும் உறுப்பினருக்குத் தெரிவிக்காமலும் இவ்அறிவிப்பை வெளியிட்டமை இம் முடிவில் வேறு அழுத்தங்கள் இருந்தன என அரசியல் வட்டாரங்களில்ஐயுறவையும், சந்தேகங்களையும் தோற்றுவித்தது.

அத்தோடு சில தொடர்ச்சியான இந்தியப் பயணத்தின் பின்னர் தொண்டமானின் இவ் அறிவிப்புகள் வெளிவந்தமை இந்திய புலனாய்வுத் துறையின் முடிவுகளையே அமைச்சர் தொண்டமான் அமுல் படுத்த முற்படுவதாகக் கருதப்பட்டமைக்கு வாய்ப்பாகியது. இல்லாது விட்டால், நீண்டகால அரசியல் முரண்பாட்டைக் கொண்ட ஒருவரை தொண்டமான் ஆதரிப்பதென்பது சாதாரணமானவிடயம்ஒன்றல்ல.

மேலும், மத்திய மாகாண சபை ஆட்சிக்கவிழ்ப்பு பிசுபிசுத்துப் போன நிலையும், காமினிதிசாநாயக்காஐ.தே. கவுடனும் சேருவதற்காக தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டிருந்த நிலையிலும் 'புரன்லைன்' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில்

**ஜெயராஜ்**

தொண்டமான் இந்தியாவைச் சாடியமையானது, தன்னை நட்டாற்றில்கைவிட்ட விரக்தியின் வெளிப்பாடு என்றே கருதப்படுகின்றது. இப் பேட்டியில்''சம்பந்தப்பட்ட மக்களின் உரிமைகளைப்பலியிடுவதன் மூலம் இரு அரசுகளும்- இந்தியா, சிறிலங்கா -இடையிலான உறவே மேலாகக்கருதப்பட்டது'' எனச் சாடியிருந்திருந்தார்

ஆனால் காமினி திசாநாயக்கா இவ் விவகாரத்தை மிக திறமையாகக் கையாண்டுள்ளதாகவே கருத இடமுண்டு. இதில் அமைச்சர் தொண்டமானினதும், இந்தியாவினதும் இராஜதந்திர நடவடிக்கைகள் தோற்றுப் போய்விட்டன என்றேகொள்ளப்பட வேண்டும்.

காமினிதிசாநாயக்கா கடந்த கால அரசியலிலும் சரி, தற்பொழுதும் சரி, தன்னை ஒரு இந்தியஆதரவாளனாகக் காட்டிக் கொண்டாலும், பௌத்த சிங்கள பேரினவாதத்தின்தலைவர்களில் ஒருவராகக் காட்டிக் கொண்டே வந்துள்ளார். இதனை தொண்டமானோ அன்றி இந்தியாவோ தவறாகக் கணிப்பீடு செய்திருப்பின் அது அவர்களின் தவறாகும். அத்தோடு பௌத்த - சிங்கள பேரினவாதமே அவர்களின் அரசியல் மூலதனம் என்ற ரீதியில், அதை அவர்கள் கைவிடுவார்கள் என எதிர்பார்க்கவும் முடியாது.

இந்நிலையில் காமினி திசாநாயக்கா இந்தியாவின் அனுசரணையுடன் அதிகாரத்தில் ஏறுவதற்கு முயற்சித்திருப்பினும் தனது பேரினவாத இயல்பைஅவர் மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை 1987ஆம் ஆண்டுஉடன்பாடு எவ்வாறு சிறிலங்கா பேரினவாதிகளால் தோற்கடிக்கப்பட்டதோ, அதே போன்று, ஆனால் சிறியளவினதான ஒரு இந்திய புலனாய்வுத்துறையின் திட்டம் தற்பொழுது தோற்கடிக்கப்பட்டது. என்றே கொள்ளப்படவேண்டும்.

இந்தியாவின் இத் தவறால், அன்று 1987இல் தமிழர் தேசியஇன விடுதலைப் போராட்டம் எவ்வாறு பலவீனப்படுத்தப்பட்டதோ, அதேபோன்று இன்று மலையகத்தில் தமிழ் மக்களின் உரிமை பலவீனப்படுத்தப்பட்டது என்றே கொள்ள முடியும்.

ஆனால் இந்தியாவின் இராஜதந்திர அணுகுமுறையை காமினி திசாநாயக்கா தனக்குப் பேரம் பேசும் வலுவுள்ளதாக மாற்றிக் கொண்டார். அதாவது அமைச்சர் தொண்டமான் தனது பேரம் பேசும் வலுவை அதிகரிப்பதற்காகச் செய்து கொண்ட காமினியுடனான கூட்டானது மறுவளமாகக் காமினியைப் பேரம் பேசும் வலுவுள்ளதாக மாற்றியது. காமினி ஐ தே.கட்சியில் இணைந்து கொள்வதற்கான தனது தீர்மானத்திற்கு பெரிதும் துணை போவதாகவும் இது இருந்தது.

ஆனால் இன்று எழுந்துள்ள புதிய கேள்வி காமினி திசாநாயக்கா தனியாக இந்திய புலனாய்வுத் துறையின் ஆலோசனையுடன் மட்டும்செயற்பட்டாரா? அல்லது டி.பி. விஜேதுங்காவின் ஆலோசனையுடனும் செயற்பட்டாரா? என்பதே ஆகும். ஏனெனில் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் காமினி திசநாயக்காஈடுபட்டு ஒரு மாத காலத்திற்குள் ஐ.தே.கட்சியுடன் இணைந்து கொண்டமையே இக கேள்விக்கான காரணமாகும்.

டி.பி. விஜேதுங்கா ஏற்கனவே காமினி திசநாயக்காவை ஐ.தே.கவுடன் இணைத்துக் கொள்ளத் தயாராகவேஇருந்தார். ஆனால் கட்சியில் எழுந்த எதிர்ப்பின் காரணமாகவும் அவ்வாறு இணைப்பதானால் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைக் கலைக்க வேண்டும் என்ற நிபந்தனையாலும் இம் முயற்சி கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது ஆனால் இன்று ஓர் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியின் பின் காமினி திசாநாயக்காஅதே பேரத்துடன் ஐ. தே.க. வில் இணைந்திருப்பது என்பது முன்னர் காமினியை இணைப்பதற்குச் சொல்லப்பட்ட காரணம் சரியா என்ற கேள்வியை எழுப்புகின்றது.

ஏனெனில் அன்று ஐ.தே. கவில் இருந்தவர்கள் இன்றும் இருக்கின்றார்கள் அன்று வைக்கப்பட்ட நிபந்தனை இன்னும் நிறைவேற்றப்பட்டதாக இல்லை. இந்நிலையில் முன்னர் இடம் பெற்றவை நாடகமாக இருக்க வேண்டும். ஆனால் இதில் ஐ.தே.க முழுமையாக ஈடுபட்டதா, டி பி.விஜேதுங்காவும் காமினிதிசாநாயக்காவும் தனித்துவமாக ஈடுபட்டார்களா என்பதும் கவனத்திற்குரியது. ஆனால் இதில் எதுவாக இருப்பினும் பௌத்த- சிங்கள பேரினவாதம் கூட்டாகச் செயற்பட்டுவிட்டது என்றே கொள்ளமுடியும்.

இவ்வாறாக இடம் பெற்ற அரசியல் இராஜதந்திர நாடகத்தின் முடிவில் அமைச்சா தொண்டமான் சிங்களப் பேரினவாதத்தின் வலையில் சிக்கிப் போனார் என்றே கொள்ளலாம் இது உடனடியாக அமைச்சர் தொண்டமானின் பலத்தை முற்றாக அழித்துவிடக்கூடியதாக இல்லாது விடினும் பெரும் பிளவை இ. தொ.காவிற்குள் ஏற்படுத்தியுள்ளதோடு தொண்டமானின் பேரம்பேசும்சக்தியையும்வெகுவாகக்குறைத்துள்ளதுஎன்றே கூறமுடியும் சிலவேளை இந் நிலையே தொடருமானால் திரு. தொண்டமான் தனது அமைச்சர் பதவியைத் தக்கவைத்துக்கொள்வதற்குக் கூட பெரும் பேரங்களில் ஈடுபட வேண்டிய நிலையை உருவாக்கிவிடக்கூடும் ஏனெனில்பௌத்த பேரினவாத சக்திகளின் கூட்டானது தென்னிலங்கையில்தீவிரப்பட்டுவருகின்றதே ஆகும்.

அத்தோடு, தனது கட்சிக்குள் தனது நிலையைத்தக்கவைத்துக் கொள்ள பெரும் பிரயத்தனங்களையும் மேற்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது: ஏனெனில் நடந்து முடிந்த நாடகத்தில் முழுத் தோல்விக்கும் தொண்டமானே பொறுப்பேற்க வேண்டிய அரசியல் சூழ் நிலையே உள்ளது இது அவரை கட்சிக்குள்ளும் பலவீனப்படுத்தியுள்ளது.

கடந்த மாதம் ஹட்டனில் கூட்டப்பட்ட இ. தொ.கா. மாநாட்டில் கட்சியின் கட்டுப்பாட்டை மீறியவர்கள் என்ற குற்றச்சாட்டில் கட்சியின் செயலாளர் செல்லச்சாமியையும் மத்தியமாகாண சபை உறுப்பினர் எட்டுப்பேரையும் வெளியேற்றுவதாக எடுத்த தீர்மானத்தை நிறைவேற்ற முடியாமலும், செல்லச்சாமியுடன் சமரசப் பேச்சுகளில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டமையும் இந் நிலையையேவெளிக்காட்டுவதாக உள்ளது.

இவற்றால் 81 வயதான பழுத்த அரசியல்வாதியின் எதிர்காலமே பெரும் நெருக்கடியில் உள்ளது இதில் இருந்து மீளாதுவிடில் அவரின் அரசியல்வாழ்விற்கு இதுவே அந்திமகாலமாக அமைந்துவிடலாம். இவ்வாறான பல சோதனைகளை முன்னரும் இவ் அரசியல் வாதி சந்தித்தாராயினும் இம் முறை மீண்டெழுவதற்கான அரசியல் சூழ் நிலை கடினமானதாகவே உள்ளது.

இந் நிலையில் இம் மூத்த அரசியல் வாதிக்கு இந்தியாவைத் தவிர வேறு எதுவும் பற்றுக்கோடாக இருப்பதாகவும் தெரியவில்லை ஆனால் இந்தியாவின்இராஜதந்திரம் இலங்கை விவகாரத்தில்தொடர்ந்தும்தோல்வியில் முடிவதுதான் அவ் அரசியல்வாதிக்கு ஏமாற்றம் தருவதாக இருக்கக் கூடும்.

# ஜனாதிபதி முறையை நீக்குமாறு சிறிலங்கா சு. க. பிரேரணை

அரசியலமைப்பு தொடர்பாகவும் தேர்தல் சட்டங்கள் தொடர்பாகவும் மறு பரிசீலனை செய்வதற்காக நியமிக்கப்பட்ட இரண்டு பாராளுமன்றத் தெரிவுக் குழுக்களும் எதிர்வரும்மார்ச்மாதத்துடன் தமது நடவடிக்கைகளை முடித்துக் கொள்ளும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இத் தெரிவுக்குழுவில் ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு பாராளுமன்ற ஜன நாயக முறை கொண்டுவரப்பட வேண்டும் என சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனது பிரேரணையில் தெரிவித்துள்ளது.

எனினும் ஜனாதிபதிஆட்சி முறையே தொடர வேண்டும் எனவும் அதில் சில மாற்றங்கள் செய்யப்படவேண்டும் எனவும் தமிழ் முஸ்லிம் கட்சிகள் பிரேரித்துள்ளன என்றும்தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான இத்தெரிவுக் குழுக்கள் தமது நடவடிக்கைகளை மார்ச் மாதத்திற்குள் முடித்துக் கொள்ளும்.

## முன்னாள் படை தளபதிகள் ஆலோசனை நிராகரிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் படைத் தளபதிகளால் கொண்டுவரப்பட விருந்த போர்ச்சபை அமைப்பைக் கைவிட வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

சிறிலங்காவின் எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா இப் போர்ச்சபை அமைப்பு முறையை நிராகரித்துள்ளார். இதனை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வடமராட்சி மீனவருக்கு இருவார நிவாரணம்

(வடமராட்சி)

கடல் வலயச் சட்டத்தினால் சுயதொழிலை இழந்து வரும் மீனவர்களுக்கான இரண்டுவார மீனவர் நிவாரணம் வழங்க வடமராட்சி பிரதேச செயலகங்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது.

பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகங்களில் பாதிப்படைந்து வரும் குறித்த மீனவர்களுக்கு இந் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணமும் வழங்கப் படவுள்ளது. கடந்த டிசம்பர் மாதத்திற்குரிய இரண்டு வாரங்களுக்கே இந் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

(யோ)

## மலேசியத் தூதுவரான இராசதுரை மீண்டும் அரசியலுக்கு வரலாம்

(கொழும்பு)

முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் தற்போதைய மலேசியாவிற்கான சிறிலங்கா தூதுவருமான செ. இராசதுரை இரு வாரங்களிற்குள் தமது தூதுவர் பதவியை இராஜினாமா செய்யலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராசதுரை ஐ. தே. க கொழும்பு மாவட்ட தேர்தல் பட்டியலில் இடம் பெறவுள்ளதாகவும் இவரை ஐ. தே. க கொழும்பு மாவட்ட எம்பியாக நியமிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

ஓய்வு பெறவுள்ள விமானப் படைத்தளபதி எயர் மார்ஷல் ரெரன்ஸ் குணவர்தனா மலேசியத் தூதுவராக செல்ல விருப்பம் தெரிவித்ததைத் தொடர்ந்தே இராசதுரையை அப்பதவியிலிருந்து ராஜினாமா செய்யுமாறு கோரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## கம்பன் கழகத்தின் தியாகராஜ சுவாமிகள்விழா

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்விழா நாளை மறுதினம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை, மாலை இருநேரமும் கம்பன் கோட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவில் இசை ஆராதனையைத் தொடர்ந்து இவ்வாண்டுக்குரிய ''இசைப் பேரறிஞர்'' விருது யாழ். பல்கலைக்கழககலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களினால் முதுபெரும் வயலின் வித்துவான், சங்கீத பூஷணம் திரு. வீ. கே. குமாரசாமி அவர்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்

### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

27-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 432

வடபகுதிக்கு உள்ளேவந்த வாகன இலக்கங்கள்:

41-9487, 42-6452, 24-5734, 24-4701, 26-7740
24-6280, 26-4376, 27-4019, 27-9416, 26-6264
24-2496, 26-6984, 24-1461, 26-3473, 42-3495
24-5461, 26-9745, 27-5186, 26-3812.

வடபகுதிக்கு வெளியேசென்ற வாகன இலக்கங்கள்:

41-9855, 24-8079, 26-767, 24-7084, 27-9404
26-3183, 42-3942, 28-6624, 22-5187, 26-0525
24-1685, 27-2056, 26-3495, 26-1253, 26-5351
24-5241, 41-9895, 27-9030, 2415258, 28-6853
28-9449.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## உதைபந்தாட்டம்

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் வலய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மாவட்டமட்ட உதைபந்தாட்ட போட்டிகளில் இன்று மாலை 3. 00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் வல்வை விளையாட்டு கழகத்தை எதிர்த்து அளவெட்டி விநாயகர் கழகம் மோதும்.

## சைவ நற்சிந்தனை

ஹாட்லிக் கல்லூரியில் இன்று சைவ நற்சிந்தனை நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கலந்துகொண்டு பரிசளிக்கவுள்ளார்.

(யோ)

## தவறவிடப்பட்டது

25-01-94இல் யாழ்ப்பாணம் கஸ் தூரியார் வீதியில் கன்னாதிட்டிக்கும், அருச்சுனா வீதி சந்திக்குமிடையில் தங்கக்கட்டி ஒன்று கைதவறப்பட்டுள்ளது. இதை கண்டெடுத்துத் தருபவர்களுக்கு பிரதியுபகாரம் வழங்கப்படும் என்பதையும் உறுதியளிக்கிறோம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: 'ஈழநாதம்' மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

## புளொட்

புலிகளுக்கு எதிராகச் செயற்படுவதுடன் கொழும்பில் பாதுகாப்புப் படையினர் தமிழ் இளைஞர்களைப் பிடிப்பதற்கு எடுத்த தேடுதல் நடவடிக்கைகளிலும் இவருக்குச் சம்பந்தம் இருப்பதாக குற்றம் சாட்டப்படுவதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

தலைநகரில் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டது குறித்து மனித உரிமைகள் அமைப்புகள் கண்டனம் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

புலிகளுக்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்தம் இல்லை என்று இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அதேவேளை இந்தக் கொலைக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்று புளொட் மறுத்துள்ளது.


## மாணவர்

இவ்வருடமும் சகலருக்கும் சீருடைகள் வழங்கப்படும் என்றும் ஆனால் வசதியுள்ள மாணவர்கள் சீருடைக்கு விண்ணப்பிக்க மாட்டார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கட்டுத்துவக்கு

டைக்குச் சென்றதாகவும் அப்போது தவறுதலாக துவக்கு வெடித்ததால் அவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(சி)




## விமானக்

எமது நிருபர்களுடனான சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறும் போது ஆறு மாதங்களுக்கு முன்னர் நான் யாழ்ப்பாணம் வந்திருந்தேன் அப்போதெல்லாம் யாழ். மக்கள் பலர் என்னைச் சந்தித்து கிளாலியில் நடைபெறும் படுகொலைகள் குறித்து எடுத்துக் கூறினார்கள். ஆனால் இம்முறை யாழ்ப்பாணம் வந்த சமயம் எவரும் கிளாலிப் பயணம் குறித்துக் கூறவில்லை. இம்முறையும் நான் பல பொதுமக்களைச் சந்தித்தேன் அவர்கள் அனைவரும் குடாநாட்டின் மீதான விமானப்படையினரது குண்டுத் தாக்குதல்கள் குறித்தே என்னிடம் கூறினார்கள்.

மேலும் யாழ். வீதியூடாக வவுனியாவுக்கு வடக்குப் பகுதிக்கு மந்தகதியில் குடும்பம் குடும்பமாக வரும் அகதிகளுக்குரிய நிவாரணத் திட்டங்களை பெரியளவில் நடைமுறைப் படுத்த முடியாமல் உள்ளது என்றும் தெரிவித்தார்

(க) (நி)

## இரவு

மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலினால் திரு. சூ. பீற்றர் மற்றும் அவரது மனைவி பி.ஜெயமணி பீற்றர் ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

(க) (நி)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் சங்கரப்பிள்ளை தில்லையம்பலம்

(காரைநகர் களபூமி வினாவளை)

காரைநகர் களபூமி வினாவளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஆறுமுகம் சங்கரப்பிள்ளை தில்லையம்பலம் 27-01-94-ல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சதாசிவம், தங்கம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி, தருமரத்தினம், கமலேஸ்வரி, தனராசரத்தினம், சண்முகரத்தினம், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், மார்க்கண்டு, நவரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌதமி, சுபாஜினி, ஜனந்தீசன் ஆகியோரின் அன்புப் பேரனும், சண்முகம், காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரமசாமி, கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக இன்று பிற்பகல் 2 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
குடும்பத்தினர்

ஆனைக்கோட்டை றோட்,
குளப்பிட்டி, கொக்குவில்;
(கொக்குவில் தபாற்கந்தோர் அருகாமை)

(7351)

## வன்னித்தம்பி வள்ளிப்பிள்ளை

காலஞ்சென்ற வன்னித்தம்பி வள்ளிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் மாவிட்டபுரம் கொல்லன் கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற வன்னித்தம்பியின் மனைவியாரும், சைவ தமிழ் கலவன் பாடசாலையின் இளைப்பாறிய ஆசிரியையும், வ. காசிப்பிள்ளை வ. சுந்தரமூர்த்தி (பூக்கண்டு), இ. தெய்வேந்திரம் (பாப்பா) ஆகியோரின் தாயாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியை கரவெட்டி சோனப்பு மயானத்தில் இன்று 28-ந் திகதி வெள்ளிக்கிழமை ந. ப. 12 மணிக்கு தகனம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கிராய் பிள்ளையார்கோவிலடி
கரவெட்டி

தகவல்:
இராசரத்தினம் தெய்வேந்திரம்
(பாப்பா)

(7352)